TNPSCJOB

# லொயோலா

# ஈசி சமூக அறிவியல்

# 7

## பருவம் - 1, 2, 3

**இணைப்பு: மனவரைபடம்**

**BASED ON CCE**

அரசு புதிய பாடத் திட்டத்தின்படி
விடைக் குறிப்பு **(Key)** அடிப்படையில்
தயாரிக்கப்பட்ட சிறப்பு நூல்.

**இலவசம்:**
**வரைபட பயிற்சி புத்தகம்**

லொயோலா
பப்ளிகேஷன்ஸ்

விவேக் இல்லம் 19, ராஜ் நகர், N.G.O. 'A' காலனி,
பாளையங்கோட்டை, திருநெல்வேலி - 627 007.
போன் : 0462 - 2553186
செல் : 94433 81701, 94422 69810, 90474 74696
81110 94696, 89400 02320, 89400 02321

₹. 260/-

★ ★ *Less Strain Score More*

TNPSCJOB | www.tnpscjob.com

# Published by

**Copy right : © LOYOLA PUBLICATION**

All rights reserved. No part of this publication may be reproduced or distributed in any form or by any means, or stored in a data base or retrieval system without the prior written Permission of the publisher.

## Preface

1. விடைகள் மிக எளிமையாகவும், மாணவ மாணவிகள் எளிதில் புரியும் வண்ணம் 10, 11 மற்றும் 12ம் வகுப்பு அரசுத் தேர்வில் விடைத்தாள் மதிப்பீடு செய்வது போல் அதன் (Key) அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது.
2. 2 மற்றும் 5 மதிப்பெண் விடைகள் சற்று விரிவாக கொடுக்கப்பட்டுள்ளது.
3. தேவைக்கேற்ப கூடுதல் வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.
4. 6ம் வகுப்பு முதல் 9ம் வகுப்பு வரை அனைத்து நூல்களும் அரசுத்தேர்வை நோக்கியே எழுதப்பட்டுள்ளது.

**குறிப்பு: Loyola EC** புத்தகங்களை 10, 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவ மாணவிகள் வாங்கிப் பயின்றால், அரசுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெற்று உச்சத்தை தொடலாம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வாழ்த்துக்கள்**

அன்புடன்

**Loyola Publication**

ஆசிரியர்கள் :

**திரு. D. கோயில்மணி**

**திரு. A. போர்ஜியா**

ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இந்த QR Code ஸ்கேன் செய்து உங்களது தொலைபேசி எண்ணை பதிவு செய்து கொள்ளவும். இதன் மூலம் பாடம் சம்பந்தப்பட்ட குறுஞ்செய்திகள், whatsapp மற்றும் SMS மூலமாக அனுப்பப்படும். இதனைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

# லொயோலா பப்ளிக்கேஷனின் – நோக்கம்

**நோக்கம் :**

படிப்பில் பின்தங்கிய மாணவர்கள் / மாணவிகளை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல் (6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை).

**நோக்கத்தை அடைய யுக்திகள் :**

1. மாணவ / மாணவிகளின் உளவியல் அடிப்படையில் எளிதில் புரிய வைத்தல்.
2. மாணவ / மாணவிகள் அச்சமின்றி அரசுத் தேர்வுகளை எதிர் கொள்ள உதவுதல்.
3. அரசுத் தேர்வுகளில் விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் விடைக்குறிப்பு (Key) அடிப்படையில் தயாரிப்பு.
4. ஒவ்வொரு கேள்விக்குரிய பதில்கள் சுருக்கமாகவும், தெளிவாகவும் இருத்தல்.
5. மெல்லக்கற்கும் மாணவ / மாணவிகளுக்கு மேலும் எளிமைப்படுத்திக் கொடுத்தல்.
   (தமிழ் மற்றும் ஆங்கில வழிக் கல்வியில்
   10ஆம் வகுப்பு – தமிழ், ஆங்கிலம், அறிவியல், சமூகஅறிவியல்)
   11ஆம் வகுப்பு – தமிழ் மற்றும் ஆங்கிலம்
   12ஆம் வகுப்பு – தமிழ் மற்றும் ஆங்கிலம்

**சிறப்புகள் :**

1. அரசுத் தேர்வில் கேட்கப்படும் புத்தக வினாக்களைத் தவிர கூடுதல் வினாக்கள் நமது பதிப்புகளில் இடம் பெற்றுள்ளன.
2. லொயோலா ஈசி நூல்களை வாங்கிப் பயன்படுத்தும் மாணவ / மாணவிகள் ...
   - ❖ அரசுத் தேர்வில் தேர்ச்சியடையவே முடியாது என்ற நிலையில் உள்ளவர்கள் மிக எளிதில் 35% மதிப்பெண்கள் பெற்று தேர்ச்சி பெறலாம்.
   - ❖ 35% - 40% மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவிகள் 75% - 80% மதிப்பெண்கள் வரை பெறலாம்.
   - ❖ 80% மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவிகள் 95% - 99% மதிப்பெண்கள் வரை பெறலாம்.
   - ❖ 10, 11 மற்றும் 12ஆம் வகுப்பு அரசுத்தேர்வுகளில் கேட்கப்படும் வினாத்தாள்களில் 98% வினாக்களும் மற்றும் பல ஆண்டுகளில் 100% வினாக்களும் இடம்பெற்று வருகின்றன என்பது லொயோலா பதிப்புகளின் சிறப்பு.

**வழிகாட்டுதல் :**

உயர் படிப்பிற்கு மாணவ / மாணவிகளின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு அவர்களுக்கு வழிகாட்டும் நோக்கில் 10, 12ஆம் வகுப்பு தேர்ச்சிக்குப் பின் என்ன படிக்கலாம்? என்பதைப் பற்றிய ஆலோசனைகள் இடம் பெற்றுள்ளன.



TNPSCJOB | www.tnpscjob.com

# பருவம் - 1

## பாடப் பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள் | 5 |
| 2 | வட இந்தியப் புதிய அரசுகளின் தோற்றம் | 12 |
| 3 | தென்னிந்தியப் புதிய அரசுகள் பிற்காலச் சோழர்களும், பாண்டியர்களும் | 19 |
| 4 | டெல்லி சுல்தானியம் | 27 |
| | **புவியியல்** | |
| 1 | புவியின் உள்ளமைப்பு | 34 |
| 2 | நிலத்தோற்றங்கள் | 43 |
| 3 | மக்கள்தொகையும் குடியிருப்புகளும் | 51 |
| | **குடிமையியல்** | |
| 1 | சமத்துவம் | 59 |
| 2 | அரசியல் கட்சிகள் | 64 |
| | **பொருளியல்** | |
| 1 | உற்பத்தி | 71 |
| | **பருவம் - 2** | 78 |
| | **பருவம் - 3** | 122 |


★

# அலகு 1

வரலாறு

# இடைக்கால இந்திய வரலாற்று ஆதாரங்கள்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. ..... என்பவை பாறைகள், கற்கள், கோவில் சுவர்கள், உலோகங்கள் ஆகியவற்றின் கடினமான மேற்பரப்பின் மீது செதுக்கப்படும் வாசகங்களாகும்.**

அ) காலவரிசையிலான நிகழ்வுப்பதிவுகள் ஆ) பயணக்குறிப்புகள்
இ) நாணயங்கள் ஈ) பொறிப்புகள் **விடை : ஈ) பொறிப்புகள்**

**2. கோவில்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ..... ஆகும்.**

அ) வேளாண்வகை ஆ) சாலபோகம்
இ) பிரம்மதேயம் ஈ) தேவதானம் **விடை : ஈ) தேவதானம்**

**3. ....... களின் காலம் பக்தி இலக்கியங்களின் காலமென அறியப்படுகிறது.**

அ) சோழர் ஆ) பாண்டியர்
இ) ராஜபுத்திரர் ஈ) விஜயநகர அரசர்கள் **விடை : அ) சோழர்**

**4. முதல் டெல்லி சுல்தான் பற்றிய தகவல்களைக் கூறும் நூல் ..... ஆகும்.**

அ) அயினி அக்பரி ஆ) தாஜ் - உல் - மா - அசிர்
இ) தசுக் - இ - ஜாஹாங்கீரி ஈ) தாரிக் - இ - பெரிஷ்டா
**விடை : ஆ) தாஜ் – உல் – மா – அசிர்**

**5. அரேபியாவில் பிறந்து இந்தியாவிற்கு வந்த மொராக்கோ நாட்டு அறிஞர் ..... ஆவார்.**

அ) மார்க்கோபோலோ ஆ) அல் - பரூனி
இ) டோமிங்கோ பயஸ் ஈ) இபன் பதூதா **விடை : ஈ) இபன் பதூதா**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. ...... கல்வெட்டு ஒரு பிரம்மதேயக் கிராமத்தின் நிர்வாகம் குறித்து விவரித்துக் கூறுகிறது. | **உத்திரமேரூர்** |
| 2. தன்னுடைய தங்க நாணயங்கள் மீது பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதித்து தன்னுடைய பெயரையும் பொறித்தவர் ........ ஆவார் | **முகமது கோரி** |
| ளைக் கொண்டிருந்தது ...... என்பது 3. ஜிட்டல்ளி | |
| 4. அடிமை வம்சத்தைச் சேர்ந்த சுல்தான் நஸ்ருதீன் மாமூதுவால் ஆதரிக்கப்பட்டவர் ...... ஆவார் | **மின்கஜ் உஸ் சிராஜ்** |
| 5. கி.பி 1420 இல் விஜயநகருக்கு வருகை புரிந்த இத்தாலியப் பயணி ..... ஆவார் | **நிகோலோ கோண்டி** |

### III. பொருத்துக.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | கஜுராகோ | அ | ஒடிசா | **இ** | **மத்தியப்பிரதேசம்** |
| 2 | கொனாரக் | ஆ | ஹம்பி | **அ** | **ஒடிசா** |
| 3 | தில்வாரா | இ | மத்தியப்பிரதேசம் | **ஈ** | **ராஜஸ்தான்** |
| 4 | விருப்பாக்சா | ஈ | ராஜஸ்தான் | **ஆ** | **ஹம்பி** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. சரியா? தவறா?

1. பள்ளிச்சந்தம் என்பது சமண சமய நிறுவனங்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலமாகும். **விடை : சரி**

2. நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் **அரசியல் நிலை** குறித்த தகவல்களை நமக்கு வழங்குகின்றன. **விடை : தவறு (பொருளாதார நிலை)**

3. தாமிரத்தின் விலை அதிகமாக இருந்ததால் அரசு ஆணைகளையும் அரசவை நிகழ்வுகளையும் பதிவு செய்வதற்கு குறைந்த செலவிலான பனையோலைகளும் காகிதமும் பயன்படுத்தப்பட்டன. **விடை : சரி**

4. டோமிங்கோ பயஸ் எனும் போர்த்துகீசியப்பயணி கி.பி 1522 இல் **சோழப்பேரரசுக்கு** வருகை புரிந்தார்.
**விடை : தவறு (விஜயநகரப் பேரரசுக்கு வருகை புரிந்தார்)**

## V. கூற்று மற்றும் காரணம்

**கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. பொருத்தமான விடையை டிக் (✓) இட்டுக் காட்டவும்.**

**1)** **கூற்று** : முகமதுகோரி தனது தங்க நாணயங்களில் பெண் தெய்வமான இலட்சுமியின் உருவத்தைப் பதிப்பித்தார்.

**காரணம்** : இத்துருக்கிய படையெடுப்பாளர் மத விசயங்களில் தாராள மனப்பான்மை கொண்டவராய் இருந்தார்.

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் இல்லை.
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு. **விடை : அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே**

**2) தவறான இணையைக் கண்டறியவும் :**

1. மதுரா விஜயம் - கங்கா தேவி
2. அபுல் பாசல் - அயினி அக்பரி
3. இபன் பதூதா - தாகுயூக் - இ - ஹிந்த்
4. அமுக்தமால்யதா - கிருஷ்ணதேவராயர் **விடை : 3. இபன் பதூதா – தாகுயூக் – இ – ஹிந்த்**

**3) பொருந்தாததைக் கண்டுபிடி.**

அ) பொறிப்புகள் ஆ) பயணக்குறிப்புகள்
இ) நினைவுச் சின்னங்கள் ஈ) நாணயங்கள் **விடை: ஆ) பயணக்குறிப்புகள்**

## VI. ஓரிரு வாக்கியங்களில் பதில் அளிக்கவும்.

**1. நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் யார்?**

நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தைத் தொகுத்தவர் நாதமுனி என்பவர்.

**2. 'தசுக்' எனும் வார்த்தையின் பொருள் யாது?**

சுய சரிதை

**3. ஜஹாங்கீர் எழுதிய நினைவுக் குறிப்பின் பெயர் என்ன?**

தசுக் - இ - ஜஹாங்கீரி

**4. வரலாற்றை அறிந்து கொள்வதற்கான இருவகைச் சான்றுகளைக் கூறுக.**

- முதல் நிலைச் சான்றுகள்
- இரண்டாம் நிலைச் சான்றுகள்

**5. இடைக்காலத்தில் கட்டப்பட்ட முக்கிய மசூதிகளையும், கோட்டைகளையும் பட்டியலிடவும்.**

**மசூதிகள் :**

1. குவ்வத் - உல் - இஸ்லாம் மசூதி, 2. மோத் - கி - மசூதி,
3. ஜமா மசூதி 4. பதேப்பூர் சிக்ரி தர்கா,
5. சார்மினார்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**கோட்டைகள் :**

1. ஆக்ரா கோட்டை, 2. சித்தூர் கோட்டை,
3. குவாலியர் கோட்டை 4. டெல்லி செங்கோட்டை,
5. தௌலதாபாத் மற்றும் பிரோஷ் கொத்தளம்

**6. இடைக்காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த முக்கியமான அயல்நாட்டுப் பயணிகளின் பெயர்களைக் கூறவும்.**

- மார்கோபோலோ
- அல்பரூனி
- இபன் பதூதா
- நிகோலோ கோண்டி
- அப்துல் ரஸாக்
- டோமிங்கோ பயஸ்

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்

**1. டெல்லி சுல்தான்கள் அறிமுகம் செய்த பலவகைப்பட்ட நாணயங்களை விவரிக்கவும்.**

- டெல்லி சுல்தான்கள் பலவகையான நாணயங்களை வெளியிட்டனர்.
- ஜிட்டல் எனப்படும் செம்பு நாணயங்களும், டங்கா எனப்படும் வெள்ளி நாணயங்களும் வெளியிடப்பட்டன. அலாவுதின் கில்ஜி தங்க நாணயங்களை வெளியிட்டார்.
- டெல்லி சுல்தான்கள் வெளியிட்ட நாணயங்கள், அவர்களைப் பற்றிய பல தகவல்களை நமக்குத் தருகின்றன.
- நாணயங்களில் உள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதார நிலை குறித்து விளக்குகின்றது.
- அலாவுதீன் கில்ஜியின் தங்க நாணயங்கள் நாட்டின் பொருளாதார வளத்தை எடுத்துக்காட்டுகிறது.
- அதேபோன்று முகமது பின்துக்ளக்கின் செப்பு நாணயங்கள் நாட்டின் நலிவு நிலையைக் காட்டுகின்றன.

## VIII. கட்டக வினாக்கள்

| | |
|---|---|
| 1. …………, பேரரசர் ஔரங்கசீப்பின் அரசவை அறிஞர் ஆவார். **விடை : காஃபி கான்** | 2. திருவாலங்காடு செப்பேடுகள் …… காலத்தைச் சேர்ந்ததாகும். **விடை : முதலாம் இராஜேந்திர சோழன்** |
| 3. …… என்பது கல்விக் கூடங்களைப் பராமரிப்பதற்கான நிலமாகும். **விடை : சாலபோகம்** | 4. பெரியபுராணத்தைத் தொகுத்தவர் ……. ஆவார். **விடை : சேக்கிழார்** |
| 5. …….. ஓர் அரேபியச் சொல். இதன் பொருள் ‘வரலாறு’ என்பதாகும். **விடை : தாரிக்** | 6. முகமது பின் துக்ளக் தனது தலைநகரை டெல்லியிலிருந்து தெற்கே அமைந்திருந்த …..க்கு மாற்றினார். **விடை : தேவகிரி** |

## IX. உயர் சிந்தனை வினா

**1. “நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பைச் சுட்டிக்காட்டுகிறது.” விளக்குக.**

- பழங்கால அரசர்களால் நாணயங்கள் வெளியிடப்பட்டன.
- செப்பு நாணயங்கள், வெள்ளி நாணயங்கள் மற்றும் தங்க நாணயங்களை அவர்கள் வெளியிட்டனர்.
- உண்மையிலேயே உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதாரச் செழிப்பை எடுத்துக் காட்டும் ஓர் அளவு கோல் ஆகும்.
- அலாவுதீன் கில்ஜி போன்ற அரசர்கள் தங்க நாணயங்களை வெளியிட்டனர். இது அவர்களின் செல்வச் செழிப்பையும், உயர்ந்த பொருளாதார நிலையையும் உணர்த்துகிறது.
- இம்மன்னர்கள் காலத்தில் தங்கம் தாராளமாகக் கிடைத்திருக்கிறது.
- ஆனால் முகமது பின் துக்ளக் போன்ற மன்னர்களின் காலத்தில் நாட்டில் அமைதியும் செழிப்பும் இல்லை. எனவே அவர் தோல் நாணயங்களை வெளியிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.
- இவ்வாறு நாணயங்களிலுள்ள உலோகங்களின் கலவை பேரரசின் பொருளாதார செழிப்பைக் காட்டுகிறது என்பதை அறியலாம்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## X. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

**1. இடைக்கால இந்தியாவின் அரண்மனைகள், கோட்டைகள், மசூதிகள், கல்லறைகள் ஆகியவற்றின் படங்கள் அடங்கிய செருகேடு (ஆல்பம்) ஒன்றைத் தயார் செய்யவும்.**

## XI. வாழ்க்கைத் திறன் (மாணவர்களுக்கானது)

**1. உனது நகரத்தில் அல்லது கிராமத்திலுள்ள நூலகங்களிலிருந்து அங்குக் கிடைக்கும் முதல் நிலை, இரண்டாம் நிலைச் சான்றுகளைக் கண்டறிந்து அறிக்கை ஒன்றைத் தயார் செய்யவும்.**

# பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. பிராமணரல்லாத உடைமையாளருக்குச் சொந்தமான நிலங்கள்**

அ) வேளாண்வகை ஆ) பிரம்ம தேயம்

இ) சாலபோகம் ஈ) தேவதானம் **விடை : அ) வேளாண்வகை**

**2. உத்திரமேரூர் கல்வெட்டுக்கள் தெரிவிப்பவை**

அ) நீதி நிர்வாகம் ஆ) நிதி நிர்வாகம்

இ) கிராம நிர்வாகம் ஈ) இராணுவ நிர்வாகம் **விடை : இ) கிராம நிர்வாகம்**

**3. வளைவுகள் மற்றும் குவி மாடங்கள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தியவர்கள்.**

அ) சோழர்கள் ஆ) முகலாயர்கள்

இ) விஜயநகரப் பேரரசர்கள் ஈ) டெல்லி சுல்தான்கள் **விடை : ஈ) டெல்லி சுல்தான்கள்**

**4. தேவாரம் மற்றும் திருவாசகம் ஆகியவை தொகுக்கப்பட்ட காலம்.**

அ) சேரர்கள் காலம் ஆ) சோழர்கள் காலம்

இ) பாண்டியர் காலம் ஈ) பல்லவர்கள் காலம் **விடை : ஆ) சோழர்கள் காலம்**

**5. இந்தியாவில் நிலவிய சதி எனும் பழக்கம் பற்றி கூறியுள்ளவர்**

அ) மார்க்கோபோலோ ஆ) அல் பரூனி

இ) இபன் பதூதா ஈ) நிகோலோ கோண்டி **விடை : இ) இபன் பதூதா**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | பொறிப்புகள் என்பவை …….. மேல் பொறிக்கப்படும் எழுத்துக்களாகும் | **கடினமான மேற்பரப்பு** |
| 2. | பிராமணர்களுக்குக் கொடையாக வழங்கப்பட்ட நிலங்கள் ………… எனப்பட்டன | **பிரம்ம தேயம்** |
| 3. | பிரகதீஸ்வரர் ஆலய[illegible]துள்ள | **தஞ்சாவூர்** |
| 4. | சார்மினார் அமைந்[illegible] | **ஹைதராபாத்** |
| 5. | தபகத் என்ற அரேபியச் சொல்லின் பொருள் ………… | **தலைமுறைகள்** |

## III. பொருத்துக.

1

| | அ | | ஆ | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ராஜதரங்கினி | அ | ஜெயதேவர் | **ஆ** | **கல்ஹணர்** |
| 2 | திருவாசகம் | ஆ | கல்ஹணர் | **ஈ** | **மாணிக்கவாசகர்** |
| 3 | கீத கோவிந்தம் | இ | சந்த்பார்தை | **அ** | **ஜெயதேவர்** |
| 4 | பிருதிவி ராஜராசோ | ஈ | மாணிக்கவாசகர் | **இ** | **சந்த்பார்தை** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



2

| | அ | | ஆ | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | மார்க்கோபோலோ | அ | மொராக்கோ நாட்டு அறிஞர் | **ஈ** | **வெனிஸ் நகரப் பயணி** |
| 2 | இபன் பதூதா | ஆ | இத்தாலியப் பயணி | **அ** | **மொராக்கோ நாட்டு அறிஞர்** |
| 3 | நிக்கோலோ கோண்டி | இ | போர்த்துக்கீசியப் பயணி | **ஆ** | **இத்தாலியப் பயணி** |
| 4 | டோமிங்கோ பயஸ் | ஈ | வெனிஸ் நகரப் பயணி | **இ** | **போர்த்துக்கீசியப் பயணி** |

## IV. சரியா? தவறா?

1. அயல்நாட்டு வரலாற்றுத் தொகுப்பாளர்களின் குறிப்புகள் சாதாரண மக்களின் வாழ்நிலை குறித்து **ஏராளமான செய்திகளைத்** தருகின்றன. **விடை : தவறு (குறைவான செய்திகளையே தருகின்றன)**
2. கல்வெட்டுக்களில் கொடை வழங்கியவர் மட்டுமே சிறப்புக் கவனம் பெறுகிறார் **விடை : சரி**
3. திருவாலங்காடு செப்பேடுகள் **முதலாம் இராஜ ராஜ சோழன்** காலத்தைச் சேர்ந்தது. **விடை : தவறு (முதலாம் இராஜேந்திரன் காலத்தைச் சேர்ந்தது)**
4. ஆழ்வார்கள் மொத்தம் **63 பேர்** இருந்தனர் **விடை : தவறு (12 பேர்)**
5. சீனாவிலிருந்து தாம் கப்பலில் வந்ததாக மார்க்கோபோலோ கூறியிருக்கிறார். **விடை : சரி**

## V. கூற்று மற்றும் காரணம்

**கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. பொருத்தமான விடையை டிக் (✓) இட்டுக் காட்டவும்.**

**1.** **கூற்று** : முகமது பின் துக்ளக் தங்க நாணயங்களை வெளியிட்டார்.
**காரணம்** : இது நாட்டில் செல்வச் செழிப்பு இருந்ததைக் காட்டுகிறது.
அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு. **விடை : ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.**

**2.** **கூற்று** : அல்பரூனி ஒரு கற்றறிந்த அறிஞர்
**காரணம்** : இவர் சமஸ்கிருதம் மற்றும் இந்தியத் தத்துவங்களையும் கற்றார்.
அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று தவறு, காரணம் சரி.
ஈ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு.
**விடை : அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே**

## இணையைக் கண்டறியவும் :

1)
1. நாணயங்கள் - முதல் நிலைச் சான்றுகள்
2. வாழ்க்கை வரலாறு - இரண்டாம் நிலைச் சான்றுகள்
3. தஜுக் - கிரேக்க சொல்
4. தாகுயுக் - அரேபியச் சொல்

**விடை : 3. தஜுக் – கிரேக்க சொல்**

2)
1. காயல் - தூத்துக்குடி மாவட்டம்
2. உத்திரமேரூர் - காஞ்சிபுரம் மாவட்டம்
3. தஜுக் - வாழ்க்கை வரலாறு
4. தாரிக் - வரலாறு

**விடை : 3. தஜுக் – வாழ்க்கை வரலாறு**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## VII. பொருந்தாததைக் கண்டுபிடி.

1. பாபர் நாமா, அக்பர் நாமா, அயினி அக்பரி, தபகத் - இ - அக்பரி **விடை : பாபர் நாமா**

2. கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், நாணயங்கள் **விடை : நாணயங்கள்**

## VIII. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. சான்றுகள் – வரையறு.**

கடந்த காலத்தை மறு கட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய ஆதாரங்களான ஆவணங்கள் அல்லது பதிவுகளே சான்றுகள் எனப்படும்.

**2. நினைவுச் சின்னங்கள் என்றால் என்ன?**

கோவில்கள், அரண்மனைகள், மசூதிகள், கல்லறைகள், கோட்டைகள், கோபுரங்கள், ஸ்தூபிகள் ஆகிய கட்டடங்கள் நினைவுச் சின்னங்கள் ஆகும்.

**3. தாரிக் – இ – பெரிஷ்டா என்ற நூலை எழுதியவர் யார்? அந்நூல் கூறுவது என்ன?**

➢ பெரிஷ்டா என்பவர் தாரிக் - இ - பெரிஷ்டா என்ற நூலை எழுதினார்.

➢ இந்நூல் இந்தியாவில் முகலாய ஆட்சியின் எழுச்சி பற்றி விவரிக்கிறது.

**4. வாழ்க்கை வரலாறு மற்றும் சுய சரிதை – வேறுபடுத்துக.**

➢ ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றி வேறொருவர் எழுதிய வரலாற்றுக் குறிப்பு வாழ்க்கை வரலாறு எனப்படும். எடுத்துக்காட்டு : அபுல் பாசல் எழுதிய அயினி அக்பரி என்ற நூல். இது அக்பரின் வாழ்க்கையைப் பற்றிய நூல்

➢ ஒருவருடைய வாழ்க்கையைப் பற்றி அவரே எழுதிய வரலாற்றுக் குறிப்பு சுய சரிதை எனப்படும். எடுத்துக்காட்டு: பாபர் எழுதிய பாபர் நாமா என்ற நூல். இது பாபரின் வாழக்கையைப் பற்றிய நூல்

## IX. விடையளிக்கவும்.

**1. சான்றுகளை வகைப்படுத்தி, அவற்றை விவரிக்கவும்.**

➢ கடந்த காலத்தை மறுகட்டுமானம் செய்வதற்கு உதவக்கூடிய ஆதாரங்களான ஆவணங்கள் அல்லது பதிவுகளே சான்றுகள் எனப்படும்.

➢ சான்றுகள் முதல் நிலைச் சான்றுகள் மற்றும் இரண்டாம் நிலைச் சான்றுகள் என இருவகைப்படும்.

**முதல்நிலைச் சான்றுகள் :**

பொறிப்புகள், நினைவுச் சின்னங்கள், நாணயங்கள், ஆகியவையும் அவற்றிலிருந்து கிடைக்கப் பெறும் செய்திகளும் முதல் நிலைச் சான்றுகள் ஆகும்.

**இரண்டாம் நிலைச் சான்றுகள் :**

இலக்கியங்கள், கால வரிசையிலுள்ள நிகழ்வுப்பதிவுகள், பயணக்குறிப்புகள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், சுய சரிதைகள் ஆகியவை இரண்டாம் நிலைச் சான்றுகள் ஆகும்.

**2. சமயச் சார்பற்ற இலக்கியங்கள் பற்றி ஒரு விளக்கம் தருக.**

➢ ப சமய சார்பற்ற இலக்[illegible] இவை விஜய நகரப் பேரரசைப் பற்றி அறிய உதவுகின்றன.

➢ மதுரா விஜயம் கங்காதேவியாலும், அமுக்த மால்யதா என்ற நூல் கிருஷ்ண தேவராயராலும் எழுதப்பட்டன.

➢ இராஜபுத்திர அரசர்களைப் பற்றிய பிருதிவி ராஜ ராசோ என்ற நூலை சந்த் பார்தை என்பவர் எழுதினார்.

➢ கல்ஹணரின் ராஜதரங்கினி இஸ்லாமுக்கு முந்தைய காலம் குறித்துதெரிவிக்கிறது.

**3. இந்தியாவுக்கு வருகை தந்த அந்நிய நாட்டுப் பயணிகள் பற்றி விரிவாக எழுதவும்.**

➢ மார்க்கோ போலோ என்ற வெனிஸ் நகரப் பயணி பாண்டிய மன்னர்கள் காலத்தில் தமிழகத்திற்கு வந்தார்.

➢ அவர் காயல் துறைமுகம் பற்றியும் அரேபியாவிலிருந்தும், பாரசீகத்திலிருந்தும் கடல் வழியாக குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டதாகவும் கூறுகிறார்.

➢ கற்றறிந்த அறிஞரான அல்பரூனி இந்தியா முழுவதும் பயணம் மேற்கொண்டு இந்திய மக்களைப் பற்றி அறிய முயன்றார்.

➢ இவர் சமஸ்கிருத மொழியைக் கற்றார்.




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- இந்தியத் தத்துவங்களைக் கற்றார்.
- அவர் எழுதிய தாகுயூக் - இ - ஹிந்த் என்ற நூலில் இந்தியாவின் நிலைகளையும், அறிவு முறையினையும், சமூக விதிகளையும் மதத்தையும் குறித்து விவாதித்துள்ளார்.
- மொரக்கோ நாட்டு அறிஞரான இபன் பதூதாவின் பயணநூல் ரிக்ளா - பயணங்கள் என்பதாகும். அவர் இந்தியாவின் சமூக நிலை, சாதி, சதி என்ற உடன் கட்டை ஏறும் பழக்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார். இந்திய வணிக நடவடிக்கைகள் பற்றியும் இவரது நூல் தெரிவிக்கிறது.
- இவர்கள் தவிர நிகோலோ கோண்டி, அப்துர் ரஸாக், டோமிங்கோ பயஸ் ஆகிய அந்நியப் பயணிகளும் இந்தியாவுக்கு வந்தனர். இவர்கள் விஜயநகரப் பேரரசின் சிறப்பு பற்றி தங்கள் நூல்களில் குறிப்பிட்டுள்ளனர்.

**மனவரைபடம்**




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

வரலாறு

# அலகு 2 வடஇந்தியப் புதிய அரசுகளின் தோற்றம்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. 'பிருதிவிராஜ ராசோ' எனும் நூலை எழுதியவர் யார்?**

அ) கல்ஹணர் ஆ) விசாகதத்தர்

இ) ராஜசேகரர் ஈ) சந்த் பார்தை **விடை : ஈ) சந்த் பார்தை**

**2. பிரதிகார அரசர்களுள் முதல் தலைசிறந்த அரசர் யார்?**

அ) முதலாம் போஜா ஆ) முதலாம் நாகபட்டர்

இ) ஜெயபாலர் ஈ) சந்திரதேவர் **விடை : ஆ) முதலாம் நாகபட்டர்**

**3. கஜினி என்னும் ஒரு சிறிய அரசு எங்கு அமைந்திருந்தது?**

அ) மங்கோலியா ஆ) துருக்கி

இ) பாரசீகம் ஈ) ஆப்கானிஸ்தான் **விடை: ஈ) ஆப்கானிஸ்தான்**

**4. கஜினி மாமூதின் படையெடுப்பிற்கு முக்கியக் காரணம் யாது?**

அ) சிலை வழிபாட்டை ஒழிப்பது. ஆ) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது.

இ) இந்தியாவில் இஸ்லாமைப் பரப்புவது. ஈ) இந்தியாவில் ஒரு முஸ்லீம் அரசை நிறுவுவது

**விடை : ஆ) இந்தியாவின் செல்வத்தைக் கொள்ளையடிப்பது**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | விக்கிரமசீலா பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தவர் ………… ஆவார் | **தர்ம பாலர்** |
| 2. | கி.பி …….. இல் சிந்துவை அராபியர் கைப்பற்றினர் | **712** |
| 3. | ஆஜ்மீர் நகரத்தை நிர்மாணித்தவர் ……. ஆவார் | **சிம்மராஜ்** |
| 4. | காந்தர்யா கோவில் …… ல் அமைந்துள்ளது | **மத்தியப் பிரதேசம்** |

### III. பொருத்துக.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | கஜுராகோ | அ | அபு குன்று | **ஆ** | **பந்தேல்கண்ட்** |
| 2 | சூரியனார் கோவில் | ஆ | பந்தேல்கண்ட் | **இ** | **கொனாரக்** |
| 3 | தில்வாரா கோவில் | இ | கொனாரக் | **அ** | **அபு குன்று** |

### IV. சரியா? தவறா?

1. 'ராஜபுத்ர' என்பது ஒரு **லத்தீன் வார்த்தை** ஆகும். **விடை : தவறு (சமஸ்கிருத வார்த்தை)**

2. அரசர் கோபாலர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார். **விடை : சரி**

3. அபுகுன்றில் அமைந்துள்ள கோவில் **சிவபெருமானுக்குப்** படைத்தளிக்கப்பட்டுள்ளது.
**விடை : தவறு (சமணகோயில்)**

4. 'ரக்ஷாபந்தன்' சகோதர உறவு தொடர்பான விழாவாகும். **விடை : சரி**

5. இந்தியர்கள் 0 முதல் 9 வரையிலான எண்களை **அரேபியர்களிடமிருந்து கற்றுக் கொண்டனர்.**
**விடை : தவறு (அரேபியர்கள் இந்தியரிடமிருந்து கற்றுக் கொண்டனர்)**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## V. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையைக் டிக் (✓) இட்டுக் காட்டவும்.

**1. கூற்று** : கன்னோஜின் மீது ஆதிக்கத்தை நிறுவவே மும்முனைப் போராட்டம் நடைபெற்றது.
**காரணம்** : கன்னோஜ் மிகப்பெரும் நகரமாக இருந்தது.

அ) காரணம் கூற்றிக்கான சரியான விளக்கமே.
ஆ) காரணம் கூற்றிக்கான சரியான விளக்கம் அல்ல.
இ) கூற்று தவறு. காரணம் சரி.
ஈ) கூற்றும், காரணமும் தவறு.

**விடை : ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல.**

**2. கூற்று I** : மகிபாலரால் தனது நாட்டை வாரணாசியைக் கடந்து விரிவுபடுத்த முடியவில்லை.
**காரணம் II** : மகிபாலரும் முதலாம் ராஜேந்திர சோழனும் சமகாலத்தவர் ஆவார்.

அ) I சரி
ஆ) II சரி
இ) I மற்றும் II சரி
ஈ) I மற்றும் II தவறு

**விடை : இ) I மற்றும் II சரி**

**3. கூற்று** : இந்தியாவில் இஸ்லாமியக் காலக்கட்டம் கி.பி (பொ.ஆ) 712 இல் அராபியர் சிந்துவைக் கைப்பற்றிய உடன் தொடங்கவில்லை.
**காரணம்** : கூர்ஜரப் பிரதிகாரர்கள் அரேபியரைக் கடுமையாக எதிர்த்தனர்.

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி

**விடை : அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே**

**4. கூற்று** : இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் தோல்வியடைந்தார்.
**காரணம்** : ராஜபுத்திரர்களிடையே ஒற்றுமை இல்லை.

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமே.
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கமல்ல.
இ) கூற்று சரி, காரணம் தவறு.
ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

**விடை : இ) கூற்று சரி, காரணம் தவறு**

**5. கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. அவற்றில் எது/எவை சரியானவை என்பதைக் கண்டறியவும்.**

i. ‘ரக்ஷாபந்தன்’ என்ற மரபானது ராஜபுத்திரர்களுடையது.
ii. வங்கப் பிரிவினையின் போது ரவீந்திரநாத் தாகூர் பெருமளவில் மக்கள் பங்கேற்ற ‘ரக்ஷாபந்தன்’ விழாவைத் தொடங்கினார்.
iii. இந்துக்களையும் முஸ்லீம்களையும் பிரிப்பதற்காக ஆங்கிலேயர் மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிரானதாக இது திட்டமிடப்பட்டது.

அ) கூற்று i சரியானது.
ஆ) கூற்று ii சரியானது.
இ) கூற்று iii சரியானது.
ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை.

**விடை : ஈ) மேற்கண்ட அனைத்தும் சரியானவை**

## VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. கன்னோஜின் மீதான மும்முனைப் போராட்டம் குறித்து எழுதுக.**

- கூர்ஜரப் பிரதிகாரர்கள், ராஷ்டிர கூடர்கள், பாலர்கள் ஆகிய மூவரும் வளம் நிறைந்த கன்னோஜியின் மீது தங்களின் மேலாதிக்கத்தை நிறுவ முயன்றனர்.
- இதனால் இவர்களுக்குள் மும்முனைப் போராட்டம் ஏற்பட்டது.

**2. ஏதேனும் நான்கு ராஜபுத்திரக் குலங்களின் பெயர்களை எழுதுக.**

பிரதிகாரர்கள், சௌகான்கள், சோலங்கிகள், பரமாரர்கள்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. பாலர் அரச வம்சத்தை நிறுவியவர் யார்?**

பாலர் அரச வம்சத்தை நிறுவியவர் கோபாலர் ஆவார்.

**4. தொடக்ககால, முதல் இரு கலிஃபாத்துக்களின் பெயர்களைக் குறிப்பிடுக.**

- அப்பாசித்துகள்
- உமையாத்துகள்

**5. காசிம் தோற்கடித்த சிந்து மன்னரின் பெயரைக் குறிப்பிடுக.**

தாஹீர்

## VII. கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிக்கவும்.

**1. சிந்துவை அரேபியர் கைப்பற்றியதன் தாக்கங்கள் யாவை? (ஏதேனும் ஐந்தைக் குறிப்பிடவும்)**

- அரேபிய அறிஞர்கள் பல இந்திய இலக்கியங்களைக் கற்றனர்.
- சமஸ்கிருத மொழியிலிருந்த வானியல், தத்துவம், கணிதம், மருத்துவம் தொடர்பான பல நூல்களை அவர்கள் அரேபிய மொழியில் மொழியாக்கம் செய்தனர்.
- 0 முதல் 9 வரையிலான எண்களை அவர்கள் இந்தியாவிலிருந்தே கற்றுக் கொண்டனர்.
- பூஜ்யத்தின் பயன்பாட்டை கற்றுக் கொண்டனர்.
- இந்தியர்களிடமிருந்து சதுரங்க விளையாட்டைக் கற்றுக் கொண்டனர்.

## VIII. உயர் சிந்தனை வினா

**1. மாமூது கஜினியின் படையெடுப்பிற்கும் முகமது கோரியின் படையெடுப்பிற்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

**மாமூது கஜினியின் படையெடுப்பு :**

வட இந்தியாவின் செல்வச் செழிப்பு மிக்க கோவில்களையும் நகரங்களையும் கொள்ளையடிப்பதே மாமூது கஜினியின் நோக்கமாகும்.

**முகமது கோரியின் படையெடுப்பு :**

இந்தியாவைக் கைப்பற்றி தனது பேரரசை விரிவாக்கம் செய்வதே முகமது கோரியின் நோக்கமாகும்.

**2. கண்டுபிடித்து நிரப்புக.**

| | முதலாம் தரெய்ன் போர் | இரண்டாம் தரெய்ன் போர் |
|---|---|---|
| போர் நடைபெற்ற ஆண்டு | **கி.பி 1191** | **கி.பி 1192** |
| போருக்கான காரணங்கள் | **முகமது கோரி தனது பேரரசை விரிவாக்கம் செய்ய விரும்பினார்.** | **முகமது கோரி முதல் தரெய்ன் போரில் ஏற்பட்ட தோல்விக்கு பழிவாங்க விரும்பினார்.** |
| கோரியைத் யா[illegible] **முகமது கோரி பிருதி[illegible]** தே[illegible] **[illegible]தார்.** | **[illegible]ராஜ் தோற்கடித்தார்** | |
| விளைவு என்ன? | **முகமது கோரி தோற்கடிக்கப்பட்டார்.** | **பிருதிவிராஜ் தோற்கடிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.** |

## IX. மாணவர் செயல்பாடு

**1. வார்த்தைத் துளிகள் :**

இவ்வார்த்தைகள் பற்றி மாணவர்களுக்கு என்ன தெரியும் என்பதை மாணவர்கள் விவாதிக்க வேண்டும்; குறிப்பும் எழுத வேண்டும்.

| | | |
|---|---|---|
| ஹர்சர் | ராஜபுத்திரர் | கன்னோஜ் |
| விக்கிரமசீலா | பிருதிவிராஜ் | கலிஃபா |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**இந்தியாவிற்கு இஸ்லாமியரின் வருகை**

- கி.பி (பொ.ஆ) 1192 **இரண்டாம் தரெய்ன் போர்**
- கி.பி (பொ.ஆ)1191 **முதலாம் தரெய்ன் போர்**
- கி.பி (பொ.ஆ) 1175 **முகமது கோரி மூல்தானைக் கைப்பற்றினார்.**
- கி.பி (பொ.ஆ) 1030 **கஜினி மாமூது மரணமடைந்தார்.**
- கி.பி (பொ.ஆ) 1001 **கஜினி மாமூது ஜெயபாலரைத் தோற்கடித்தார்.**
- கி.பி (பொ.ஆ) 712 **முகமது பின் காசிம் சிந்துவின் மீது படையெடுத்தார்.**

## X. வரைபட வினா

**இந்திய ஆறுகள் வரைபடத்தில் பிரதிகாரர்கள், சௌகான்கள், பாலர்கள், பரமாரர்கள் ஆண்ட பகுதிகளைக் குறிப்பிடுக. (வரைபடப் பயிற்சி புத்தகத்தை பார்க்கவும்)**

## XI. கட்டக வினாக்கள்

| | |
|---|---|
| 1. மாமூது கஜினியால் தோற்கடிக்கப்பட்ட பஞ்சாபின் ஷாகி வம்ச அரசர் யார்? **விடை : ஜெயபாலர்** | 2. ராஜபுத்திர ஓவிய பாணிகள் .......என்று அழைக்கப்படுகின்றன. **விடை : ராஜஸ்தானி** |
| 3. ராஜபுத்திரக் குலங்கள் எத்தனை இருந்தன? **விடை : 36** | 4. இந்தியாவில் முதல் இஸ்லாமியப் பேரரசை உருவாக்கியவர் யார்? **விடை : முகமது கோரி** |
| 5. டெல்லியின் முதல் சுல்தான் யார்? **விடை : குத்புதீன் ஐபக்** | 6. மெக்கா எங்குள்ளது? **விடை : அரேபியா** |

## XII. வாழ்க்கைத் திறன் (மாணவர்களுக்கானது)

**1. ராஜபுத்திர அரசர்களால் நிர்மாணிக்கப்பட்ட கோவில்களின் படங்களைக் கொண்டு ஒரு செருகேட்டினை (ஆல்பம்) தயார் செய்யவும்.**

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்வு செய்யவும்.

**1. கூர்ஜரப் பிரதிகாரர் மரபினைத் தோற்றுவித்தவர்**

ஆ) வத்சராஜஅ) ஹரிச்சந்திரா

ஈ) தேவ பாலஇ) நாகபட்டர் **விடை : அ) ஹரிச்சந்திரா**

**2. பாலர் வம்சத்தினைத் தோற்றுவித்தவர்**

அ) தர்ம பாலர் ஆ) தேவ பாலர்

இ) கோபாலர் ஈ) மகி பாலர் **விடை : இ) கோபாலர்**

**3. தேவபாலர் ஆதரித்த மதம்**

அ) சீக்கிய மதம் ஆ) இந்து மதம்

இ) பௌத்த மதம் ஈ) சமண மதம் **விடை : இ) பௌத்த மதம்**

**4. கஜினி மாமூதுவால் தோற்கடிக்கப்பட்ட ஷாகி அரசர்**

அ) ஜெயச்சந்திரா ஆ) ஜெயபாலர்

இ) ராஜ்ய பாலர் ஈ) ஜெய சுந்தர் **விடை : ஆ) ஜெயபாலர்**

**5. முகமது கோரியின் திறமை வாய்ந்த தளபதி**

அ) பால்பன் ஆ) இல்டுமிஷ்

இ) நாசிர் உதீன் ஈ) குத்புதீன் ஐபக் **விடை : ஈ) குத்புதீன் ஐபக்**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | | விடைகள் |
|---|---|---|
| 1. | ராஜபுத்திரர்களின் கூட்டமைப்பு ….. எனப்பட்டது | **ராஜபுதனம்** |
| 2. | பால வம்சத்தின் மிகச் சிறந்த வலிமை மிக்க அரசர் …… ஆவார் | **முதலாம் மகிபாலர்** |
| 3. | சௌகான் வம்சத்தைச் தோற்றுவித்தவர் …. ஆவார் | **சிம்மராஜ்** |
| 4. | சௌகான்களின் தலைநகர் ……… ஆகும் | **சாகம்பரி** |
| 5. | இறைதூதர் முகமது நபி தோற்றுவித்த சமயம் …. | **இஸ்லாம்** |

## III. பொருத்துக.

1.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | போஜர் | அ | பாலர்கள் | **இ** | **பிரதிகாரர்கள்** |
| 2 | தேவபாலர் | ஆ | சௌகான்கள் | **அ** | **பாலர்கள்** |
| 3 | பிருதிவிராஜ் | இ | பிரதிகாரர்கள் | **ஆ** | **சௌகான்கள்** |

2.

| அ | | ஆ | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | சந்தேரி | அ | கோட்டை | **அ** | **கோட்டை** |
| 2 | சோமநாதபுரம் | ஆ | தூண் | **இ** | **கோவில்** |
| 3 | ஜெய ஸ்தம்பா | இ | கோவில் | **ஆ** | **தூண்** |

## IV. சரியா? தவறா?

1. தர்ம பாலர் வீக்கிரமசீலா மடாலயத்தை நிறுவினார். **விடை : சரி**
2. மும்முனைப் போட்டிக்குப் பின், மூன்று சக்திகளும் **பலம் பெற்றன**
   **விடை : தவறு (பலவீன மடைந்தன)**
3. சௌகான் வம்சாவளியின் முதல் அரசர் பிருதிவிராஜ் ஆவார். **விடை : தவறு (சிம்மராஜ்)**
4. சூரியனார் கோவில் கொனார்க்கில் உள்ளது. **விடை : சரி**
5. இரண்டாம் தரெயின் போர் ராஜபுத்திரர்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. **விடை : சரி**

## V. கூற்று மற்றும் காரணம்

**அ) கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்ந்து, சரியான கூற்று/கூற்றுகளைக் கூறவும்.**

1. தர்மபாலர் தலைசிறந்த சமண மத ஆதரவாளர் ஆவார்.
2. அவர் நாலந்தா பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்தார்
3. தர்மபாலருக்குப்பின் அவரது மகன் தேவபாலர் ஆட்சிக்கு வந்தார்

ஆ) 2 மற்றும் அ) சரி மற்றும் 2 சரி

ஈ) அனைத்தும் இ) சரி மற்றும் 2 த **விடை: இ) 1 மற்றும் 2 தவறு**

**2. கூற்று** : தரெய்ன் போரின் வெற்றிக்குப் பின் முகமது கோரி கஜினிக்குத் திரும்பினார்.

**காரணம்** : தனது நாட்டின் எல்லையில் அச்சுறுத்தல்களை ஏற்படுத்திய துருக்கியரையும், மங்கோலியரையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது.

அ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் ஆகும்.
ஆ) காரணம் கூற்றுக்கான சரியான விளக்கம் அல்ல
இ) கூற்று சரி ஆனால் காரணம் தவறு
ஈ) கூற்று தவறு, காரணம் சரி **விடை : அ) காரணம் கூற்றக்கான சரியான விளக்கம் ஆகும்.**

**ஆ) தவறான இணையைக் கண்டறியவும் :**

1) 1. வத்ச ராஜா - பிரதிகாரர்கள்
2. கோபாலர் - பாலர்கள்
3. சிம்மராஜ் - பராமரர்கள் **விடை : 3. சிம்மராஜ் – பராமரர்கள்**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



2) 1. பிரதிகாரர்கள் - மாளவம்
2. பாலர்கள் - வங்காளம்
3. பரமாரர்கள் - டெல்லி **விடை : 3. பரமாரர்கள் – டெல்லி**

**இ) பொருந்தாததைக் கண்டுபிடி.**

1. பிரதிகாரர்கள், சோலங்கிகள், துருக்கியர், பரமாரர்கள் **விடை : துருக்கியர்**
2. சோமநாதபுரம், ஆம்பர், கஜுராகோ, தில்வாரா **விடை : ஆம்பர்**

## VI. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்.

**1. வங்கப்பிரிவினை எப்போது நிகழ்ந்தது?**

வங்கப்பிரிவினை 1905ல் நிகழ்ந்தது.

**2. ரக்ஷா பந்தன் பற்றி சிறு குறிப்பு வரைக. (ராக்கி)**

- ரக்ஷா பந்தன் என்பது ராஜபுத்திரர்களுக்கு உரிய ஒரு விழாவாகும்.
- இது சகோதரத்துவத்தையும், அன்பையும் கொண்டாடும் ஒரு விழாவாகும்.
- ஒரு பெண் ஒரு ஆடவரின் மணிக்கட்டில் ராக்கியைக் கட்டி விட்டால் அப்பெண் அந்த ஆடவனை சகோதரனாகக் கருது கிறாள் என்று பொருள்.
- அப்படியான ஆண்கள் அப்பெண்களைப் பாதுகாக்கக் கடமைப் பட்டவர்கள் ஆவர்.

**3. ராஜபுத்திரர்களின் தோற்றம் பற்றி கூறு.**

- ராஜபுத் எனும் சொல் ரஜ்புத்ர எனும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும்.
- ராஜபுத்திரர்கள் தங்கள் வம்சாவளித் தோற்றத்தைக் கடந்த காலத்திலிருந்து தொடங்குகின்றனர்.
- அவர்களின் மிக முக்கியமான மூன்று குலங்கள் சூரிய வம்சி, எனும் சூரிய குலம், சந்திர வம்சி எனும் சந்திர குலம் மற்றும் அக்னி குலம் என்பனவாகும்.
- ராஜபுத்திரர்களில் 36 அரச குலங்கள் உள்ளன.

**4. தர்மபாலர் பற்றி சிறு குறிப்பு வரைக.**

- தர்ம பாலர், கோபாலர் என்பவருடைய மகன் ஆவார்.
- இவர் வட இந்தியாவில் ஒரு வலிமை மிக்க சக்தியாக விளங்கினார்.
- கன்னோசி மீது படையெடுத்து வெற்றி பெற்றார்.
- அவர் மிகச் சிறந்த பௌத்த ஆதரவாளராவார்.
- அவர் விக்ரமசீலா என்ற கல்விக்கான மடாலயத்தை உருவாக்கினார்.

**5. கஜினி மாமூதுவின் வெற்றிகளைக் குறிப்பிடுக.**

- கஜினி மாமூது ஷாகி அரசுக்கு எதிராக படையெடுத்து அதன் அரசர் ஜெயபாலைத் தோற்கடித்தார்
- வைகிந்த் என்னுமிடத்தில் ஆனந்த பாலரைத் தோற்கடித்தார்.
- நாகர்கோட், தானேஸ்வர் ஆகிய நகரங்களைச் சூறையாடினார்.
- கன்னோஜியின் மன்னரைத்
- கொள்ளையடித்தார்.மதுரா நகர் மற்றும் சோம

## VII. விடையளிக்கவும்.

**1. கலை மற்றும் கட்டடக் கலைக்கு ராஜபுத்திரர்களின் பங்களிப்பினை விவாதி.**

**கலை :**

- ராஜபுத்திரர்களின் காலத்தில் இலக்கியம், இசை, நடனம், ஓவியம், சிற்பம் ஆகிய கலைகளும் கவின் கலைகளும் செழிப்புற்றன.
- ராஜஸ்தானி என்றழைக்கப்பட்ட ஓவியக்கலை தோன்றியது.

**கட்டடக் கலை :**

- ராஜபுத்திரர்கள் சித்தோர்கார், ரான்தம்பூர், கும்பல்கார், மாண்டு, குவாலியர், சந்தேரி, அசிர்கார் ஆகிய இடங்களில் கோட்டைகளைக் கட்டினர்.
- குவாலியரிலுள்ள மான்சிங் அரண்மனை, ஆம்பர் கோட்டை, உதய்பூரில் ஏரியின் நடுவே அமைந்துள்ள அரண்மனை ஆகியவை இவர்கள் காலத்தவையாகும்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- கஜுராகோ எனும் இடத்தில் கட்டப்பட்டுள்ள கோவில், கொனார்க்கிலுள்ள சூரியனார் கோவில், அபு குன்றின் மீது அமைந்துள்ள தில்வாரா கோயில், காந்தர்யா கோவில் ஆகியவை ராஜபுத்திரரின் கோவில் கட்டடக்கலைக்கு சிறந்த சான்றுகளாகும்.

**2. பாலர்களின் பண்பாட்டுப் பங்களிப்பு யாது?**

- பாலர்கள் பௌத்த கோயில்களையும், புகழ் பெற்ற நாளந்தா, விக்கிரமசீலா பல்கலைக்கழகங்களையும் ஆதரித்தனர்.
- பாலர்கள் மூலம் பௌத்த சமயம் திபெத்தில் நிறுவப்பட்டது.
- சுமத்ரா மற்றும் ஜாவாவைச் சேர்ந்த இந்து பௌத்த அரசுகளுடன் பாலர்கள் சுமூகமான உறவு கொண்டிருந்தனர்.
- தனித்தன்மை வாய்ந்த பாலர்களின் கலை உருவானது.
- செப்புச் சிலைகளிலும் பனை ஓலைகளிலும் வரையப்பட்ட ஓவியங்கள் வெளியிடப்பட்டன.

**3. முதல் மற்றும் இரண்டாம் தரெய்ன் போர்களை விவரிக்க.**

**முதல் தரெய்ன் போர் :**

- முகமது கோரி முல்தான் மற்றும் பஞ்சாப்பைத் தாக்கி அவற்றைக் கைப்பற்றினார்.
- இந்த ஆபத்தான சூழலில் பிருதிவிராஜ் சௌகானின் தலைமையில் வட இந்திய இந்து அரசர்கள்ஒரு கூட்டணியை உருவாக்கினர்.
- 1191ல் தரெய்ன் என்னுமிடத்தில் நடைபெற்ற போரில் பிருதிவிராஜ் சௌகான் முகமது கோரியைத் தோற்கடித்தார். இது முதல் தரெய்ன் போர் எனப்படுகிறது.

**இரண்டாம் தரெய்ன் போர் :**

- இத்தோல்விக்குப் பழிவாங்கும் பொருட்டு முகமது கோரி ஒரு பெரும் படையைத் திரட்டி பிருதிவிராஜிக்கு எதிராக புறப்பட்டார்.
- பல இந்து அரசர்களும் குறுநிலத் தலைவர்களும் பிருதிவிராஜிக்கு ஆதரவு அளித்தனர்.
- ஆயினும் 1192ல் நடைபெற்ற இரண்டாம் தரெய்ன் போரில் பிருதிவிராஜ் முகமது கோரியால் தோற்கடிக்கப்பட்டார். பிருதிவிராஜ் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்டார்.
- இப்போர் ராஜபுத்திரர்களுக்குப் பேரிழப்பை ஏற்படுத்தியது.

**மனவரைபடம்**

ராஜபுத்திரர்கள் (36 அரச குலங்கள்)

**பிரதிகாரர்கள்**

ஹரிச்சந்திரா - முதலாம் நாகபட்டர் - வத்சராஜா

இரண்டாம் நாகபட்டர் - ராமபத்ரா - மிகிரபோஜா

**பாலர்கள்**

கோபாலர் - தர்மபாலர்

- மகிபாலர்

**சௌகான்கள்**

சிம்மராஜ்

பிருதிவிராஜ்

**கலை**

இலக்கியம் - இசை - நடனம்

ஓவியம் - சிற்பம் - கவின்கலைகள்

ராஜஸ்தானி பாணி

**கட்டடக்கலை**

**கோட்டைகள் :** சித்தோர்கார் - ரான்தம்பூர் கும்பல்கார் - மாண்டு - குவாலியர் - சந்தேரி - அசிர்கார்

**அரண்மனைகள் :** குவாலியர் - ஆம்பர் - உதய்பூர் - ஜோத்பூர் மாளிகை

**கோவில்கள் :** கஜுராகோ - சூரியனார் கோவில் - தில்வாரா சமணக் கோவில் - காந்தர்யா கோவில்

✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

அலகு 1

புவியியல்

# புவியின் உள்ளமைப்பு

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

**1. நைஃப் (Nife) ________ ஆல் உருவானது.**

அ) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ் ஆ) சிலிக்கா மற்றும் அலுமினியம்

இ) சிலிக்கா மற்றும் மெக்னீசியம் ஈ) இரும்பு மற்றும் மெக்னீசியம்

**விடை: அ) நிக்கல் மற்றும் ஃபெர்ரஸ்**

**2. நிலநடுக்கம் மற்றும் எரிமலை வெடிப்பு ________ விளிம்பின் அருகில் ஏற்படுகின்றது.**

அ) மலை ஆ) சமவெளிகள்

இ) தட்டுகள் ஈ) பீடபூமிகள் **விடை: இ) தட்டுகள்**

**3. நிலநடுக்கத்தின் ஆற்றல் செறிவின் அளவினை ______ மூலம் அளக்கலாம்.**

அ) சீஸ்மோகிராஃப் ஆ) ரிக்டர் அளவு கோல்

இ) அம்மீட்டர் ஈ) ரோட்டோ மீட்டர் **விடை: ஆ) ரிக்டர் அளவு கோல்**

**4. பாறைக் குழம்பு வெளியேறும் குறுகலான பிளவு ________ என்று அழைக்கப்படுகிறது.**

அ) எரிமலைத்துளை ஆ) எரிமலைப் பள்ளம்

இ) நிலநடுக்க மையம் ஈ) எரிமலை வாய் **விடை: அ) எரிமலைத் துளை**

**5. மத்திய தரைக் கடலின் கலங்கரை விளக்கம் என அழைக்கப்படும் எரிமலை ________.**

அ) ஸ்ட்ராம்போலி ஆ) கரக்கடோவா

இ) பியூஜியாமா ஈ) கிளிமாஞ்சாரோ **விடை: அ) ஸ்ட்ராம்போலி**

**6. ________ பகுதி " பசிபிக் நெருப்பு வளையம்" என்று அழைக்கப்படுகிறது.**

அ) பசிபிக் வளையம் ஆ) மத்திய அட்லாண்டிக்

இ) மத்திய கண்டம் ஈ) அண்டார்ட்டிக் **விடை: அ) பசிபிக் வளையம்**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|---|
| 1. | புவிக்கருவத்திற்கும் கவசத்திற்கும் இடையே அமையும் எல்லைக்கோடு ________ என்று அழைக்கப்படுகிறது. | **வெய்சார்ட் குட்டன்பெர்க் என்ற இடைவெளி** |
| 2. | நில நடுக்க அலைகளைப் பதிவு செய்யும் கருவியின் பெயர் ________ ஆகும். | **நில அதிர்வுமானி (Seismograph)** |
| 3. | பாறைக் குழம்பு வெளியேறி அது பரவிக்கிடக்கும் பகுதி ________ என்று அழைக்கப்படுகிறது. | **எரிமலை வெளியேற்றம்** |
| 4. | செயல்படும் எரிமலைக்கு உதாரணம் ________ ஆகும். | **செயின்ட் ஹெலன்** |
| 5. | எரிமலைகளின் அறிவியல் பூர்வமான ஆய்வுகளை ________ என அழைக்கின்றனர். | **எரிமலை ஆய்வியல்** |

### III. பொருந்தாததை வட்டமிடுக.

**1. மேலோடு, (மாக்மா), புவிக்கருவம், கவசம்**

**2. நிலநடுக்க மையம், நில நடுக்க மேல் மையப்புள்ளி, (எரிமலைவாய்), சிஸ்மிக் அலைகள்**

TNPSCJOB



3. உத்தரகாசி, சாமோலி, கொய்னா, கரக்கடோவா
4. லாவா, எரிமலைவாய், சிலிக்கா, எரிமலைப் பள்ளம்.
5. ஸ்ட்ராம்போலி, ஹெலென், ஹவாய், பூயூஜியாமா

## IV. பொருத்துக

| | அ | | ஆ | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | நிலநடுக்கம் | அ | ஜப்பானிய சொல் | இ | **திடீர் அதிர்வு** |
| 2 | சிமா | ஆ | ஆப்பிரிக்கா | ஈ | **சிலிகா மற்றும் மக்னீசியம்** |
| 3 | பசிபிக் நெருப்பு வளையம் | இ | திடீர் அதிர்வு | உ | **உலக எரிமலைகள்** |
| 4 | சுனாமி | ஈ | சிலிகா மற்றும் மக்னீசியம் | அ | **ஜப்பானிய சொல்** |
| 5 | கென்யா மலை | உ | உலக எரிமலைகள் | ஆ | **ஆப்பிரிக்கா** |

## V. கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியத்தை கருத்தில் கொண்டு சரியானதை (✓) செய்யவும்

1. **கூற்று** : பூமியின் உருவத்தை ஒரு ஆப்பிளோடு ஒப்பிடலாம்.
**காரணம்** : புவியின் உட்பகுதியானது மேலோடு, மெல்லிய புறத்தோல், புவிக்கருவம் ஆகியவற்றைக் கொண்டது.
அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி, காரணம் தவறு
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை
**விடை: அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.**

2. **கூற்று** : உலகின் மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் பசிபிக் கடலில் உள்ளன.
**காரணம்** : பசிபிக் கடலின் மேற்கு மற்றும் கிழக்குக் கடற்கரைப் பகுதியை பசிபிக் நெருப்பு வளையம் என அழைக்கிறோம்.
அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி, ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று தவறு, காரணம் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறானவை
**விடை: அ) கூற்றும் காரணமும் சரி, கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.**

## VI. ஒரு வரியில் விடையளிக்கவும்:

1. **புவியின் மேலோட்டின் பெயரை எழுதுக.**
புவிமேலோடு (Crust)

2. **சியால் (SIAL) என்றால் என்ன?**
கண்டங்களின் மேற்பகுதி.

3. **புவிப் பாறைக்கோளத் தட்டின் நகர்வின் பெயர் என்ன?**
கண்டத்திட்டு நகர்வுகள்

4. **செயலிழந்த எரிமலைக்கு உதாரணம் தருக.**
ஆப்பிரிக்காவின் கென்யா எரிமலைகள்.

## VII. கீழ்கண்டவற்றிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

1. **மெல்லிய புறத்தோல் (அ) கவசம் என்றால் என்ன?**
**மெல்லிய புறத்தோல் (அ) கவசம்:**
- புவி மேலோட்டின் அடுத்த அடுக்கு **கவசம்** (mantle) எனப்படுகிறது.
- கவசம் மேல் கவசம் மற்றும் கீழ்க்கவசம் என இருவகைப்படும்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. புவிக்கருவம் பற்றி சுருக்கமாக எழுதவும்.**

**புவிக்கருவம்:**

- புவியின் மையப் பகுதியை **புவிக்கரு** எனக் குறிப்பிடுகின்றனர். இது **பேரிஸ்பியர்** என்றும் அழைக்கப்படுகிறது.
- புவிக்கரு இரண்டு அடுக்குகளைக் கொண்டது.

i வெளிப்புற புவிக்கரு (திரவநிலையில் இரும்புக் குழம்பு)

ii உட்புற புவிக்கரு (திட நிலையில் உள்ள நைஃப்)

**3. நிலநடுக்கம் வரையறு.**

**நிலநடுக்கம்:**

புவியின் மேலோட்டின், ஒரு பகுதியில் ஏற்படும் எதிர்பாராத நகர்வானது, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும், நடுக்கத்தையும் ஏற்படுத்துவதே **''நிலநடுக்கம்''** என்கிறோம்.

**4. சீஸ்மோகிராஃப் என்றால் என்ன?**

**சீஸ்மோகிராஃப்:**

புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவியை **சீஸ்மோகிராஃப்** என அழைக்கிறோம்.

**5. எரிமலை என்றால் என்ன?**

**எரிமலை:**

புவியின் மேற்பரப்பில் உள்ள பிளவு அல்லது துளை வழியே வெப்பம் மிகுந்த மாக்மா என்னும் பாறைக் குழம்பு வெளியேறுவதையே **எரிமலை** என்கிறோம்.

**6. செயல்படும் அடிப்படையில் மூன்று எரிமலைகளின் பெயர்களை எழுதுக.**

**செயல்படும் அடிப்படையில் எரிமலைகளின் பெயர்கள்:**

- செயல்படும் எரிமலை
- உறங்கும் எரிமலை
- செயலிழந்த எரிமலை

## VIII. காரணம் கூறு

**1. புவியின் உட்புறத்திலிருந்து ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.**

**புவியின் உட்புறத்திலிருந்து ஒருவருமே மாதிரி எடுக்கவில்லை.**

ஏனெனில்,

அதிக வெப்பம் மற்றும் அழுத்தம் காரணமாக புவியின் உட்புறத்திலிருந்து மாதிரி எடுக்க முடிவதில்லை.

**2. கண்டங்களின் மேலோடு கடலின் மேலோட்டைவிட அடர்த்தி குறைவு.**

**கண்டங்களின் மேலோடு கடலின் மேலோட்டை விட அடர்த்தி குறைவு.**

ஏனெனில்

- கண்டங்களின் மேற்பகுதி சிலிக்கா மற்றும் அலுமினியம் தாதுக்களால் ஆனது. இதுவே **சியால்** என அழைக்கப்படுகிறது. இதன் சராசரி அடர்த்தி 2.7 கி/செ.மீ$^3$
- மேலோட்டின் கீழ்பகுதி சிலிக்கா மற்றும் மக்னீசியத்தை மூலக்கூறுகளாக கொண்டு அமைந்துள்ளது. இதுவே **சிமா** என அழைக்கப்படுகிறது. இதன் சராசரி அடர்த்தி 3.0 கி/செ.மீ$^3$

## IX. வேறுபடுத்துக.

**1. சியால் மற்றும் சிமா**

| | சியால் | சிமா |
|---|---|---|
| 1 | புவிமேலோட்டின் மேற்பகுதி | புவி மேலோட்டின் கீழ்பகுதி. |
| 2 | முக்கிய கனிமக் கூறுகள் சிலிக்கா மற்றும் அலுமினியம் | முக்கிய கனிமக் கூறுகள் சிலிக்கா மற்றும் மக்னீசியம். |
| 3 | சராசரி அடர்த்தி 2.7 கி/செ.மீ$^3$ | சராசரி அடர்த்தி 3.0 கி/செ.மீ$^3$ |
| 4 | கண்டங்களை உருவாக்குகிறது | கடல் தரைகளை உருவாக்கிறது. |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. செயல்படும் எரிமலை மற்றும் உறங்கும் எரிமலை**

| | செயல்படும் எரிமலை | உறங்கும் எரிமலை |
|---|---|---|
| 1 | அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலைகள் | பல வருடங்களாக எரிமலைக் குழம்பு வெளியேற்றத்துக்காள எந்த அறிகுறியும் தென்படாமல், எப்போது வேண்டுமானாலும் செயல்படக் கூடிய எரிமலைகள். |
| 2 | பெரும்பாலான எரிமலைகள் பசிபிக் கடற்கரையோரகமாக அமைந்துள்ளன. | இவைகள் உறங்கும் எரிமலைகள் |
| 3 | **முக்கிய எரிமலைகள்:**<br>ஸ்டாராம்போலி (மத்திய தரைக்கடல்)<br>செயின்ட் ஹெலன்ஸ் (அமெரிக்கா)<br>மவுனாலோ (ஹவாய் தீவு) | **முக்கிய எரிமலைகள்:**<br>வெசுவியஸ் (இத்தாலி)<br>பியூஜியா (ஜப்பான்)<br>கிரகடோவா (இந்தோனேஷியா) |

## X. பத்தியளவில் விடையளி

**1. நிலநடுக்கத்தின் விளைவுகள் பற்றி எழுதுக.**

**நிலநடுக்கத்தின் விளைவுகள்:**

- புவி மேலோட்டின் ஒரு பகுதியில் ஏற்படும் எதிர்பாரா நகர்வு, நிலத்தை அதிரவைக்கும் அசைவையும் நடுக்கத்தையும் ஏற்படுத்துவதே **நிலநடுக்கம்** ஆகும்.
- நிலநடுக்கம் **புவிப்பரப்பில்** பல்வேறு மாற்றங்களை ஏற்படுத்துகின்றது.மலைப்பிரதேசங்களில் **நிலச்சரிவுகளை** ஏற்படுத்துகின்றன.
- **கட்டிடங்கள் இடிந்து விழுவது** நிலநடுக்கத்தின் முக்கிய விளைவாகும். வீடுகள் இடிந்து நொறுக்கி **மரணக் குழிகளாக** மாறுகின்றன.
- **நிலத்தடி நீர் அமைப்பும்** நிலநடுக்கத்தால் பெரிதும் பாதிப்படைகிறது.
- **தீப்பற்றுதல்** மற்றோர் முக்கிய ஆபத்தாகும்.
- நிலநடுக்கத்தால் கடலில் ஏற்படும் பெரிய அலைகளான **சுனாமி** கடலோரப் பகுதிகளில் பெருத்த சேதத்தை உண்டாக்குகின்றன.

**2. எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகளை விளக்குக.**

**எரிமலை வெடிப்பின் அடிப்படையில் அதன் வகைகள்:**

புவிமேற்பரப்பு பிளவு வழியே மாக்மா பாறைக் குழம்பு வெளியேறுவது **எரிமலை** ஆகும். எரிமலைகள் அதன் எரிமலை குழம்பு வெளியேறும் கால அளவினை கொண்டு ➢ செயல்படும் எரிமலை ➢ செயல்படாத எரிமலை ➢ செயலிழந்த எரிமலை என மூவகைப்படும்.

**செயல்படும் எரிமலை:**

- அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலை **செயல்படும் எரிமலைகள்** ஆகும். பெரும்பாலான எரிமலைகள் பசிபிக் நெருப்பு வளையத்தில் அமைந்துள்ளன.
- ஸ்ட்ராம்போலி (மத்திய தரைக்கடல்)
- செயின்ட் ஹெலன் (அமெரிக்கா)
- மவுனோலோ (ஹவாய்) ஆகியன செயல்படும் எரிமலைகள்.

**செயல்படாத எரிமலை:**

- பல ஆண்டுகளாக எரிமலைக் குழம்பை வெளியேற்றும் எந்த அறிகுறியையும் வெளிப்படுத்தாமல், ஆனால் எப்போது வேண்டுமானாலும் செயல்படக் கூடிய எரிமலைகள் **செயல்படாத எரிமலைகள்** ஆகும். இவை **உறங்கும் எரிமலைகள்** எனவும் அழைக்கப்படுகின்றன.
- வெசுவியஸ் (இத்தாலி)
- பியூஜியாமா (ஜப்பான்)
- சிரகோட்டா (இந்தோனேஷியா) ஆகியன செயல்படாத எரிமலைகள்.

**செயலிழந்த எரிமலை:**

- வெடிப்பு ஆற்றல் முழுவதையும் இழந்து, வெடிப்பதை நிறுத்திவிட்ட எரிமலை **செயலிழந்த எரிமலை** எனப்படும்.
- போப்பா (மியான்மர்)
- கிளிமாஞ்சரோ (ஆப்பிரிக்கா)
- கென்யா (ஆப்பிரிக்கா) ஆகியன செயலிழந்த எரிமலைகள்



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. முக்கியமான எரிமலை மண்டலங்களை எழுதி ஏதேனும் ஒன்று பற்றி விவரி**

**முக்கியமான எரிமலை மண்டலங்கள்:**

உலகில் மூன்று முக்கிய எரிமலை நிகழ்வு பகுதிகள் உள்ளன. அவை

- பசிபிக் வளையப் பகுதி
- மத்திய கண்டப் பகுதி
- மத்திய அட்லாண்டிக் பகுதி.

**பசிபிக்வளையப் பகுதி:**

- இந்த எரிமலைப் பகுதியானது பசிபிக் பெருக்கடலின் கிழக்கு மற்றும் மேற்கு கடலோரப் பகுதிகளில் அமைந்துள்ளது.
- மூன்றில் இரண்டு பங்கு எரிமலைகள் இப்பகுதியில் அமைந்திருப்பதால் இதனை **''பசிபிக் நெருப்பு வளையம்''** என்று அழைக்கின்றனர்.

## XI. சிந்தனை வினா (HOTS)

**1. பூமியின் உட்கருவம் மிகவும் வெப்பமானது ஏன்?**

**பூமியின் உட்கருவம் மிகவும் வெப்பமானது.**

ஏனெனில்

பூமியின் உட்கருவம் திடநிலையில் உள்ள நிக்கல் மற்றும் இரும்பால் ஆனதால் அதிக வெப்பத்துடன் காணப்படுகிறது.

**2. எரிமலைகள் அழிவானதா அல்லது ஆக்கப்பூர்வமானதா?**

**எரிமலைகள் அழிவானது மற்றும் ஆக்கபூர்வமானது**

**அழிவானது:**

- எரிமலை வெடிப்பு நிலநடுக்கங்கள், பெரு வெள்ளப் பெருக்குகள், மண் சரிவுகள், பாறை வீழ்ச்சிகள் ஆகியவற்றை ஏற்படுத்துகிறது.
- லாவா எனும் எரிமலைக் குழம்பு நீண்ட தூரம் பயணிக்கும் பொழுது தனது பாதையில் உள்ள அனைத்தையும் எரிக்கும், புதைக்கும் அல்லது சேதத்திற்கு உட்படுத்தும்.
- பெருமளவு தூசு மற்றும் சாம்பல் சுவாசத்தை கடினமாக்கும் அல்லது எரிச்சல் ஊட்டும்.
- எரிமலை வெடிப்புகள் வானிலை மாற்றங்களை ஏற்படுத்தும். எரிமலைப் பகுதிகள் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் போக்குவரத்தைப் பாதிக்கும்.

**ஆக்கபூர்வமானது:**

- எரிமலையின் போது உண்டாகும் பொருட்கள் மண் வளத்தை அதிகரித்து வேளாண் செயல்பாடுகளுக்கு ஊக்கமளிக்கிறது.
- வெப்பமான எரிமலைப் பகுதி புவி வெப்ப ஆற்றலை உருவாக்குவதற்கு உதவுகிறது.
- பெரும்பாலான எரிமலைப் பொருட்கள் கட்டுமானப் பொருட்களாக பயன்படுகின்றன.
- செயல்படாத (உறங்கும்) எரிமலைகள் மற்றும் செயல்படும் எரிமலைகள் அதிகமாக ஈர்க்கும் சுற்றுலாத் தலங்களாக இருக்கின்றன.

**3. எரிமலை எவ்வாறு ஒரு தீவை உருவாக்குகிறது?**

**எரிமலை ஒரு தீவை உருவாக்குதல்:**

- பல எரிமலைகள் புவியின் பெருங்கடல்களின் அடியில் உருவாகின்றன. கடல் நீருக்குக் கீழே வெடிப்புக்கு உட்படும் எரிமலை பெருங்கடலின் நீர்ப்பரப்புக்கு மேலே எழும்புகிறது.
- பெருங்கடல் தீவுகள் எரிமலைத் தீவுகள் எனவும் அழைக்கப்படுகின்றன.
- ஐஸ்லாந்து நாடு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் நீருக்கடியில் ஏற்பட்ட எரிமலை வெடிப்பினால் உருவானதாகும்.

## XII. செயல்பாடுகள்

**1. நிலநடுக்கம் மற்றும் எரிமலை பற்றிய படங்களை வைத்து ஒரு படத்தொகுப்பு தயாரிக்கவும். (மாணவர்களுக்கானது)**




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. எரிமலையின் பாகங்களைக் குறிக்கவும்.**




**3. உலக வரைபடத்தில் பசிபிக் நெருப்பு வளையத்தைக் குறிப்பிடுக.**

**(வரைபடப் பயிற்சி புத்தகத்தை பார்க்கவும்)**

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

**1. புவியின் கொள்ளளவில் கவசம் ________ கொண்டுள்ளது.**

அ) 1% ஆ) 84%

இ) 51% ஈ) ஒன்றுமில்லை **விடை: ஆ) 84%**

**2. வெளிப்புற புவிக்கருவில் ________ மிகுதியாக உள்ளது.**

அ) சிலிக்கா ஆ) மக்னீசியம்

இ) இரும்பு ஈ) நிக்கல் **விடை: இ) இரும்பு**

**3. கொலம்பியா பீடபூமி ________ ல் உள்ளது**

அ) வட அமெரிக்கா ஆ) தென் அமெரிக்கா

இ) ஆஸ்திரேலியா ஈ) கனடா **விடை: அ) வட அமெரிக்கா**

**4. பேரென் தீவு கடைசியாக ______ம் ஆண்டில் எரிமலைக் குழம்பை வெடித்து வெளியேற்றியது.**

அ) 1997 ஆ) 2007

ஈ) 1987 இ) 2017 **விடை: இ) 2017**

**________.5. உலகின் மிகப்பெரிய செயல்படும் எரிமலை**

அ) மவுனாலோ ஆ) செயின்ட் ஹெலன்

இ) ஸ்டாராம்போலி ஈ) பினாடுபோ **விடை: அ) மவுனாலோ**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | | விடைகள் |
|---|---|---|
| 1. | எரிமலைகள் பற்றி அறிவியல் பூர்வமான ஆய்வுகளை மேற்கொள்ளும் வல்லுநர்கள் ________ என அழைக்கப்படுகின்றனர். | எரிமலை ஆய்வியலாளர்கள் |
| 2. | எரிமலை மீண்டும் வெடித்து கூம்பு வட்டக் குன்றின் உச்சியில் தோற்றுவிக்கும் பெரிய பள்ளம் ________ | வட்ட எரிமலைவாய் |
| 3. | எரிமலைகள் பற்றிய அறிவியல் பூர்வமான ஆய்வுகள் ________ எனப்படும். | எரிமலை ஆய்வியல் |
| 4. | புவியின் ஆரம் ________ கி.மீ ஆகும். | 6371 |
| 5. | கவசமானது சுமார் ______ கி.மீ தடிமனாக காணப்படுகிறது. | 2900 |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## III. பொருத்துக

1.

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ரிக்டர் அளவை | அ | 6.0 | இ | 0-9 |
| 2 | அதிர்வை உணர்தல் அரிது | ஆ | 7.0 | ஈ | 2.0 |
| 3 | பெரும் சேதம் | இ | 0-9 | ஆ | 7.0 |
| 4 | அதிக வலிமையானது | ஈ | 2.0 | அ | 6.0 |
| 5 | நிலம்பிளந்து வீழ்தல் | உ | 5.0 | உ | 5.0 |

| 2. | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | பாறைக் குழம்பு | அ | புவிமேலோட்டின் அடுத்தபகுதி | ஈ | **திரவ நிலையில் உள்ள பாறைக்குழம்பு** |
| 2 | பாகுத்தன்மை | ஆ | புவி அதிர்வு அலைகள் பதிவு செய்யும் கருவி | உ | **பிசுபிசுத்தன்மையைப் பொறுத்த லாலாவின் ஓட்டம்** |
| 3 | சீஸ்மோகிராப் | இ | புவியின் மையப்பகுதி | ஆ | **புவி அதிர்வு அலைகள் பதிவு செய்யும் கருவி** |
| 4 | கவசம் | ஈ | திரவ நிலையில் உள்ள பாறைக்குழம்பு | அ | **புவிமேலோட்டின் அடுத்த பகுதி** |
| 5 | கரு | உ | பிசுபிசுத் தன்மையைப் பொறுத்த லாவாவின் ஓட்டம் | இ | **புவியின் மையப்பகுதி** |

## IV. சரியா? தவறா?

1. கடல் தரைகள் பகுதி பசால்ட் பாறைகளாலானது **விடை : சரி**
2. ஜப்பானிய கடலோரப் பகுதிகளில் சுனாமியின் உருவாக்கம் பொதுவாகக் காணப்படுகிறது. **விடை : சரி**
3. உலகில் 68 % நிலநடுக்கங்கள் பசிபிக் வளைய பகுதியில் ஏற்படுகின்றன. **விடை : சரி**
4. எரிமலை வெடிப்பு வெளியேற்றத்துக்கு எடுத்துக்காட்டு கரக்காட்டாவோ தீவிலுள்ள எரிமலை ஆகும். **விடை : சரி**
5. பேரென் தீவு அந்தமான் கடலில் உள்ளது. **விடை : சரி**

## V. கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை கருத்தில் கொண்டு சரியானதை தேர்வு செய்யவும்.

**1. கூற்று** : சிலிகா அதிகமுள்ள அமில லாவா வேகமாகப் படிகின்றது.

**காரணம்** : செயல்படாத எரிமலைகள் அதிக செயல்பாடு கொண்டவை. அடிக்கடி வெடித்து வெளியேற்றும் எரிமலைகள்.

அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று சரி காரணம் தவறு
ஈ) கூற்றும் காரணமும் தவறு **விடை: ஈ) கூற்றும் காரணமும் தவறானவை**

**2. கூற்று** : புவி அதிர்வு அலைகளை பதிவு செய்யும் கருவி ரிக்டர் ஆகும்

**காரணம்** : சுனாமி கடலுக்கடியில் ஏற்படும் நிலநடுக்கத்தால் உண்டாகிறது.

அ) கூற்றும் காரணமும் சரி கூற்றைக் காரணம் சரியாக விளக்குகிறது.
ஆ) கூற்றும் காரணமும் சரி ஆனால் கூற்றைக் காரணம் சரியாக விளக்கவில்லை.
இ) கூற்று தவறு ஆனால் காரணம் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு **விடை: இ) கூற்றும் தவறு ஆனால் காரணம் சரி**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## VI. தவறான இணையைக் கண்டு பிடிக்கவும்.

| | அ | ஆ |
|---|---|---|
| 1 | புவிக்கரு | பேரிஸ்பியர் |
| 2 | புவிமேலோடு | அஸ்தினோஸ்பியர் |

**விடை: புவிமேலோடு – அஸ்தினோஸ்பியர்**

## VII. பொருத்தமில்லாதாதைக் கண்டுபிடி.

1. புவிமேலோடு, புவிக்கரு, எரிமலைப்பள்ளம், கவசம் **விடை: எரிமலைப் பள்ளம்**
2. சியால் (SIAL), நைஃப் (NIFE), சிமா (SIMA), எபின் (EFIN) **விடை: எபின் (EFIN)**

## VIII. பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வாக்கியங்களில் விடையளி:

**1. மூன்று வகையான நிலநடுக்க அலைகளைப் பெயரிடு.**

**மூன்று வகையான நிலநடுக்க அலைகள்:**

- P - அலைகள் (அழுத்த அலைகள்)
- S - அலைகள் (முறிவு அலைகள்)
- L - அலைகள் (மேற்பரப்பு அலைகள்)

**2. மென் அடுக்கு (மென் பாறைக் கோளம்) என்றால் என்ன?**

**மென் பாறைக் கோளம்:**

புவி மேலோட்டிற்கும் கவச மேலடுக்கிற்கும் இடையே உள்ள பகுதியே **மென்பாறைக் கோளம்** எனப்படும்.

**3. ‘‘நீல நிறக் கோள்’’ குறித்து எழுதுக.**

**நீல நிறக் கோள்:**

- பூமியின் பரப்பு 71 % நீரால் சூழப்பட்டுள்ளது.
- பூமி **‘நீல நிறக்கோள் ’** என அழைக்கப்படுகிறது.

**4. புவியின் நகர்வுகளை அதன் ஆக்க சக்திகளின் அடிப்படையில் எவ்வாறு வகைப்படுத்தலாம்?**

**ஆக்க சக்திகளின் அடிப்படையில் புவி நகர்வுகள்:**

- புவியின் உள்ளிருந்து வெளிப்படும் ஆற்றல் **அக உந்து சக்திகள்**
- புவியின் வெளிப்புறத்தில் இருந்து இயங்கும் சக்திகள் **புற உந்து சக்திகள்**

**5. நிலநடுக்கத்தால் ஏற்படும் முக்கிய விளைவு என்ன?**

**நிலநடுக்கத்தால் ஏற்படும் முக்கிய விளைவு:**

புவியின் மேலோட்டில் பிளவு மற்றும் விரிசல்கள் கொண்ட ஒரு பகுதி பிளந்து, கீழ் இறங்குவதே நிலநடுக்கத்தால் ஏற்படும் முக்கிய விளைவாகும்.

## IX. விரிவான விடை தருக.

**1. ‘கண்டத்தட்டு நகர்வுகள்’ குறித்து எழுதுக.**

**கண்டத்தட்டு நகர்வுகள்:**

- கற்கோள் உடைப்பால் ஏற்படும் தட்டுகளை **கற்கோள தட்டுகள்** என்கிறோம்.
- கற்கோள தட்டுகளின் (கண்டத்தட்டுகள் அல்லது கடற் தட்டுகள்) நகர்வுகளே **கண்டத்தட்டு நகர்வுகளாகும்.**
- புவியின் உட்புறத்திலிருந்து வெளிப்படும் வெப்பமானது இத்தட்டுகளின் இயக்க சக்தியாக செயல்படுகிறது. இத்தட்டுகள் வெவ்வேறு திசைகளில் வெவ்வேறு வேகத்தில் நகர்கின்றன.
- சிற்சில பகுதிகளில் தட்டுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று விலகிச் செல்கின்றன. சிற்சில பகுதிகளில் ஒன்று மற்றொன்றின் அருகாமையில் நெருங்கிவரும்போது மோதிக் கொள்கின்ளன.
- ஒரு கடற்தட்டு கண்டத்தட்டின் மீது போதும் போது கண்டத்தட்டுகளின் விளிம்பு பகுதியில் எரிமலைகளாக உருவெடுக்கின்றது. சமயங்களில் தட்டுகள் ஒன்றின் மீது மற்றொன்று மோதும் போது வளைந்து மடிப்புகளை உருவாக்குகின்றன. இமய மலைச் சிசரங்கள் உருவானது இவ்வகையில்தான்.
- புவியின் உள்ளிருந்து வெளிப்படும் ஆற்றல் **அக உந்து சக்திகள்**
- புவியின் வெளிப்புறத்தில் இருந்து இயங்கும் சக்திகள் **புற உந்து சக்திகள்** என புவியின் நகர்வுகளை ஆக்க சக்தியின் அடிப்படையில் பிரிக்கலாம்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. எரிமலை வெடிப்பின் விளைவுகள் யாவை?**

**எரிமலை வெடிப்பின் விளைவுகள்:**


- புவியின் உள் ஆழம் அதிகரிக்க அதிகரிக்க வெப்பமானது 35 மீட்டருக்கு $1^{\circ}$ செ ஆக உயர்ந்து கொண்டே வருகிறது.
- வெப்பத்துடன் அழுத்தமும் அதிகரிக்கின்றது. **15 கிலோமீட்டர்** ஆழத்தில் அழுத்தமானது **சதுர செ.மீக்கு 5 டன்கள்** என்ற அளவில் உயருகின்றது.
- இத்தகைய நிலையில் புவியின் உள்ளே பாறைக் குழம்பு மிதமான இளகிய நிலையில் உள்ளது. இதுவே **மாக்மா** ஆகும். மிகுதியான அழுத்த நிலையில் மாக்மாவானது எளிதில் பற்றக் கூடிய வாயுக்களை ஈர்த்துக் கொள்ளும் திறன் கொண்டதாக காணப்படுகிறது.
- இத்திறன் காரணமாகவே ஆற்றலற்ற புவிப்பகுதிகளில் மாக்மா பாறைக்குழம்பு வெடித்து வெளியேறுகிறது.

**3. மத்திய தரைக்கடல் - இமயமலை நிலநடுக்கம் பகுதி குறித்து எழுது. மேலும் இப்பகுதியில் ஏற்பட்ட சில நிலநடுக்கங்கள் பற்றி கூறுக.**

**மத்திய தரைக்கடல் - இமயமலை நிலநடுக்கப்பகுதி:**

- உலகின் 31% நிலநடுக்கங்கள் ஆசியா கண்டத்தில் உள்ள இமயமலைப் பகுதியிலும் வடமேற்கு சீனாவிலிருந்து மத்திய தரைக்கடல் பகுதி வரையிலும் ஏற்படுகின்றன.
- இந்தியாவின் இமயமலைப் பகுதிகள், கங்கை பிரம்மபுத்திரா சமவெளிகள் நிலநடுக்க பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.
- அதிக எண்ணிக்கையிலுள்ள நிலநடுக்கங்கள் இப்பகுதிகளில் ஏற்பட்டுள்ளன. மோசமான மற்றும் மிக மோசமான அழிவுகளை ஏற்படுத்திய நிலநடுக்கங்கள் இப்பகுதியில் ஏற்பட்டதாக உணரப்பட்டுள்ளது.
  - உத்திரகாசியில் ஏற்பட்ட நிலநடுக்கம் (1991)
  - சாமோலியில் ஏற்பட்ட நிலநடுக்கம் (1999)
- நிலநடுக்கப் பாதிப்புகள் அற்ற பகுதிகளாக சொல்லப்பட்ட தக்காண பீடபூமியிலேயே இரண்டு மிக மோசமான நிலநடுக்கங்கள் ஏற்பட்டுள்ளன.
  - கொய்னாவில் ஏற்பட்ட நிலநடுக்கம் (1967)
  - லாத்தூரில் ஏற்பட்ட நிலநடுக்கம் (1993)

**மனவரைபடம்**




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

அலகு 1

குடிமையியல்

# சமத்துவம்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்வு செய்க

**1. பின்வருவனவற்றுள் எது சமத்துவத்தின் கீழ் வருவதில்லை?**

அ) பிறப்பு, சாதி, மதம், இனம், நிறம், பாலினம் அடிப்படையில் பாகுபாடு இன்மை
ஆ) தேர்தலில் போட்டியிடும் உரிமை
இ) அனைவரும் சட்டத்தின் முன் சமமாக நடத்தப்படுதல்
ஈ) பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்

**விடை : ஈ) பணக்காரர்கள் மற்றும் ஏழைகள் இடையில் சமத்துவமின்மையைக் காட்டுதல்**

**2. கீழ்க்கண்டவைகளில் எது அரசியல் சமத்துவம் ஆகும்?**

அ) அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது.
ஆ) இனம், நிறம், பாலினம் மற்றும் சாதி அடிப்படையில் சமத்துவமின்மை அகற்றப்படுதல்
இ) சட்டத்தின் முன் அனைவரும் சமம்.
ஈ) சட்டம் கைகளில் செல்வம் செறிவு தடுப்பு

**விடை : அ) அரசாங்கத்திற்கு மனு செய்வது மற்றும் பொதுக் கொள்கைகளை விமர்சிப்பது**

**3. இந்தியாவில் உள்ள அனைத்து குடிமக்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்படும் வயது ________.**

அ) 21 ஆ) 18 இ) 25 ஈ) 31 **விடை : ஆ) 18**

**4. சாதி, பணம், மதம் ஆகியவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை**

அ) இயற்கை சமத்துவமின்மை ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை
இ) பொருளாதார சமத்துவமின்மை ஈ) பாலின சமத்துவமின்மை

**விடை : ஆ) மனிதனால் உருவாக்கப்பட்ட சமத்துவமின்மை**

**5. சுவிட்சர்லாந்தில், பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்ட ஆண்டு**

அ) 1981 ஆ) 1971 இ) 1991 ஈ) 1961 **விடை : ஆ) 1971**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | குடிமை சமத்துவம் ________க்கு முன்பு அனைவரும் சமம் என்பதைக் குறிக்கிறது. | **சட்டத்து** |
| 2. | ________ முதல் ________ வரையிலான இந்திய அரசியலமைப்புச் சட்ட பிரிவுகள் சமத்துவ உரிமையைப் பற்றி குறிப்பிடுகின்றன. | **14, 18** |
| 3. | தேர்தலில் போட்டியிடும் உரிமை என்பது ________ உரிமை ஆகும். | **அரசியல்** |
| 4. | சமத்துவம் என்பது முதலாவதாக ________ இல்லாததாகும். | **சமூக சிறப்புரிமை** |

### III. குறுகிய விடையளி

**1. சமத்துவம் என்றால் என்ன?**

**சமத்துவம் :**

சமத்துவம் என்பது ஒரு தனிமனிதன் அல்லது ஒரு குழு வேறுபாடு காட்டி நடத்தப்படாமல் இருத்தல் அல்லது பால், சமயம் மற்றும் வயது அடிப்படையில் குறைவாக நடத்தப்படாமல் இருத்தல் என்பதாகும்.

**2. பாலின சமத்துவம் ஏன் தேவையானது?**

**பாலின சமத்துவம் தேவையானது. ஏனெனில்,**

- பெண்களுக்கு சம உரிமை அளிக்கவும்.
- வாய்ப்புகள் மற்றும் வளங்களை ஆண் பெண் இருவரும் சமமாகப் பெறவும் பாலின சமத்துவம் தேவையானது.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. குடிமை சமத்துவம் என்றால் என்ன?**

**குடிமை சமத்துவம் :**

சட்டத்தின் முன் அனைத்து குடிமக்களும் சமமாக நடத்தப்படுவதே குடிமை சமத்துவம் ஆகும்.

## IV. விரிவான விடையளி

**1. சமத்துவத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.**

**சமத்துவத்தின் முக்கியத்துவம் :**

- சமத்துவம் பல நூறு ஆண்டுகளாக மனித சமூகத்தை ஊக்குவித்து வழிநடத்தி வருகிறது.
- சமத்துவம் அனைத்து மனிதர்களும் சமமான மதிப்புள்ளவர்கள் என்ற கோட்பாட்டை வலியுறுத்துகிறது.
- சுதந்திரம், சமத்துவம் ஆகியவை நடைமுறைப் படுத்தப்படும்போது மட்டுமே மக்களாட்சி வெற்றி பெறுகிறது.
- குடிமை சமத்துவம், சமூக சமத்துவம், அரசியல் சமத்துவம், பாலின சமத்துவம் ஆகியவை சமூக வளர்ச்சிக்கு மிக அவசியம்.
- சமத்துவம் தனிமனித மாண்பினை தக்க வைக்கிறது.

**2. அரசியல் சமத்துவம் என்றால் என்ன?**

**அரசியல் சமத்துவம் :**

- இந்திய குடிமக்கள் அனைவருக்கும்
  - வாக்களிக்கும் உரிமை
  - பொது அலுவலகத்தில் பங்கு கொள்ளும் உரிமை
  - அரசை விமர்சனம் செய்யும் உரிமை

  போன்ற உரிமைகள் வழங்கப்படுவதே அரசியல் சமத்துவம் எனப்படுகிறது.

**அரசியல் சமத்துவம் பின்வரும் வழிகளில் வழங்கப்படுகிறது:**

- இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.
- 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.
- இந்தியாவில் 25 வயது பூர்த்தியடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.
- மக்கள் அரசை விமர்சிக்கலாம். மாறுபட்ட கருத்துக்களை தெரிவிக்கலாம்.

**3. இந்திய அரசியலமைப்பு சட்டம் சமத்துவத்திற்கான உரிமையை எவ்வாறு பாதுகாக்கிறது?**

**இந்திய அரசியலமைப்பில் சமத்துவம் :**

உலகின் அனைத்து நாடுகளின் அரசியல் அமைப்புகளும் அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன. இதே போன்று இந்திய அரசியலமைப்பு அதன் குடிமக்களுக்கு அரசியலமைப்பு சட்டப்பிரிவுகள் 14 - 18 மூலம் சமத்துவத்தை அளிக்கிறது.

- சட்டப்பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம் என உத்தரவாதம் அளிக்கிறது.
- சட்டப்பிரிவு 15 - பாகுபாட்டை தடை செய்கிறது.
- சட்டப்பிரிவு 16 - பொது வேலை வாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு அளிக்கிறது.
- சட்டப்பிரிவு 17 - தீண்டாமையை ஒழிக்கிறது.
- சட்டப்பிரிவு 18 - பட்டங்கள் அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது.

சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது அரசியலமைப்பு சட்டப்பிரிவு 21 ல் மேலும் வலிமைப்படுத்தப்பட்டுள்ளது.

## V. உயர் சிந்தனை வினா

**1. பள்ளிகளில் சமத்துவமின்மையை நாம் எவ்வாறு அகற்ற முடியும்?**

**பள்ளிகளில் சமத்துவமின்மையை அகற்றும் வழிமுறைகள் :**

- மாணவர்கள் அனைவரையும் ஒரே மாதிரியாக நடத்துதல்.
- ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல்.
- தனித்திறமைகளை வளர்ப்பதுடன், குழுவாக இணைந்து திறமைகளை வளர்க்க ஊக்குவித்தல்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- தண்டனைகளைத் தவிர்த்து, உரையாடல்கள் மூலம் தவற்றை உணர்த்துதல்.
- ஆசிரியர் - மாணவர் இடையே நல்லுறவை வளர்த்தல்.
- நடுநிலை தவறாமல் நடத்தல்.

## VI. வாழ்வியல் திறன்

| | சமத்துவத்தின் வகைகள் பற்றி அறிதல் | எந்த சமத்துவ வகையைச் சார்ந்தது |
|---|---|---|
| 1 | தகுதி, சாதி, நிறம், மதம் மற்றும் தரம் ஆகியவற்றின் அடிப்படையில் குடிமக்கள் மத்தியில் எந்த பாகுபாடுகளும் இருக்கக் கூடாது. | சமூக சமத்துவம் |
| 2 | சட்டத்திற்கு முன் அனைவரும் சமம். | குடிமை சமத்துவம். |
| 3 | வாக்களிப்பதற்கான உரிமை, அரசாங்க அலுவலகத்தில் பணியாற்றும் உரிமை, அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை | அரசியல் சமத்துவம். |
| 4 | எந்த விதத்திலும் ஆணுக்கு குறைவாக என் திறமை இல்லை. | பாலின சமத்துவம். |

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடு

**1. ________ மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சமத்துவமின்மை.**
அ) பொருளாதாரம் ஆ) நிறம் இ) உயரம் ஈ) திறன் **விடை : அ) பொருளாதாரம்**

**2. ஏ.வி. டைசி ________ சட்ட வல்லுநர்.**
அ) இந்திய ஆ) பிரிட்டிஷ் இ) அமெரிக்க ஈ) பிரெஞ்சு **விடை : ஆ) பிரிட்டிஷ்**

**3. ________ என்பது அரசியல் சமத்துவம் அல்ல.**
அ) வாக்குரிமை ஆ) பொது அலுவலில் பங்கேற்பு
இ) சுயமரியாதை ஈ) அரசை விமர்சனம் செய்தல் **விடை : இ) சுயமரியாதை**

**4. இந்தியாவில் ________ வயது பூர்த்தியடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.**
அ) 18 ஆ) 21 இ) 25 ஈ) 30 **விடை : இ) 25**

**5. ________ பாகுபாட்டை தடை செய்கிறது.**
அ) சட்டப்பிரிவு 14 ஆ) சட்டப்பிரிவு 15 இ) சட்டப்பிரிவு 16 ஈ) சட்டப்பிரிவு 17
**விடை : ஆ) சட்டப்பிரிவு 15**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. இயற்கை மனிதனை சமமாக ________ | **உருவாக்கவில்லை** |
| 2. சமத்துவம் மனித சமூகத்தை வழிநடத்திய ஆற்றல் வாய்ந்த ______ மற்றும் _______ கோட்பாடாகும். | **நீதி, அரசியல்** |
| 3. சட்டத்தின் ஆட்சி என்ற பதத்தை, ஏ.வி. டைசி என்ற ________ சட்ட வல்லுநர் வாதுரைத்தார். | **பிரிட்டிஷ்** |
| 4. ________ ஆம் ஆண்டில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்றது. | **1952** |
| 5. ________ மற்றும் ________ என்பது மக்களாட்சியின் தூண்கள் ஆகும். | **சமத்துவம், நீதி** |

### III. பொருத்துக

**அ)**

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | சட்டப்பிரிவு 15 | அ | வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு | **ஈ** | **பாகுபாட்டை தடை செய்தல்** |
| 2 | சட்டப்பிரிவு 16 | ஆ | தீண்டாமையை ஒழித்தல் | **அ** | **வேலை வாய்ப்பில் சம வாய்ப்பு** |
| 3 | சட்டப்பிரிவு 17 | இ | சட்டத்தின் முன் சமம் | **ஆ** | **தீண்டாமையை ஒழித்தல்** |
| 4 | சட்டப்பிரிவு 18 | ஈ | பாகுபாட்டை தடை செய்தல் | **இ** | **சட்டத்தின் முன் சமம்** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



ஆ)

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | பாகுபாடு | அ | வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுதல் | **ஆ** | **வேறுபாடு (வித்தியாசம்)** |
| 2 | முடியாட்சி | ஆ | வேறுபாடு (வித்தியாசம்) | **ஈ** | **தனிநபர் அரசு** |
| 3 | சமத்துவம் | இ | சிறப்பு உரிமைகள் | **அ** | **வாய்ப்புகள் அனைவருக்கும் வழங்கப்படுதல்** |
| 4 | சலுகைகள் | ஈ | தனிநபர் அரசு | **இ** | **சிறப்பு உரிமைகள்** |

## IV. சரியா / தவறா என குறிப்பிடுக

1. சுதந்திரம் மற்றும் சமத்துவம் மக்களாட்சிக் கோட்பாடுகளாகும். **விடை : சரி**
2. குடிமை சமத்துவம் என்பது சட்டத்தின் பார்வையில் அனைவரும் சமம். **விடை : சரி**
3. பாலின சமத்துவம் என்பது ஆண், பெண் இருவரும் சமமாக நடத்தப்பட வேண்டும் என்பதாகும். **விடை : சரி**
4. மனித மாண்பு என்பது சுயமரியாதை ஆகும். **விடை : சரி**
5. பாலின சமத்துவம் என்பது ஐ.நா. நிறுவனத்தின் நிலையான மேம்பாட்டிற்கான 17 குறிக்கோள்களில் ஐந்தாவது ஆகும். **விடை : சரி**

## V. தவறான இணையைக் கண்டுபிடி

1) சமத்துவம் - மரியாதை
2) சமத்துவம் - மனித மாண்பு
3) சமத்துவம் - ஏழைகளுக்கல்ல **விடை : 3) சமத்துவம் - ஏழைகளுக்கல்ல**

## VI. பொருந்தாததைக் கண்டுபிடி

1. சமூகம், குடிமை, மதம் சார்ந்த, அரசியல். **விடை : மதம் சார்ந்த**
2. ராம்மோகன் ராய், M.G. ரானடே, E.C. வித்யாசாகர், நேரு. **விடை : நேரு**

## VII. ஓரிரு வாக்கியங்களில் விடையளிக்கவும்

1. **"சமத்துவம்" - வரையறு. (பேராசிரியர் லாஸ்கி கூற்றுப்படி)**

**பேராசிரியர் லாஸ்கி அவர்களது கூற்றுப்படி "சமத்துவம்" :**

"சமத்துவம் என்பது சமமாக நடத்துவது மட்டுமல்ல, வெகுமதி அளிப்பதிலும் சமத்துவம் இருப்பதாகும். முதலாவதாக சமூக சிறப்புரிமை இல்லாததும் இரண்டாவதாக போதுமான வாய்ப்புகள் அனைவருக்கம் வழங்கப்படுவதும் ஆகும்."

2. **இந்திய வாக்குரிமை குறித்து நீ என்ன அறிந்துள்ளாய்?**

**இந்திய வாக்குரிமை :**

- இந்தியாவில் 18 வயது பூர்த்தியடைந்த அனைவருக்கும் எவ்வித பாகுபாடும் இல்லாமல் வாக்குரிமை அளிக்கப்பட்டுள்ளது.
- 1952 ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் பொதுத் தேர்தலிலேயே இந்தியாவில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

3. **பெண்கள் சம அந்தஸ்து பெறுவதற்கு கடினமாக பணியாற்றிய சமூக செயல்பாட்டாளர்கள் சிலரைக் குறிப்பிடுக.**

**பெண்கள் சம அந்தஸ்து பெற கடினமாகப் பணியாற்றியவர்கள் :**

- ராஜாராம் மோகன்ராய்
- ஈஸ்வர சந்திர வித்யாசாகர்
- தயானந்த சரஸ்வதி
- M.G. ரானடே



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## VIII. விடையளிக்கவும்

**1. சமத்துவத்தை எவ்வாறு மேம்படுத்துவாய்?**

நாம் சமத்துவத்தை பின்வருமாறு மேம்படுத்தலாம்.

- அனைவரையும் நியாயமாக நடத்துதல்.
- அனைவரையும் உள்ளடக்கிய ஒரு பண்பாட்டினை உருவாக்குதல்.
- வாய்ப்புகள் அனைவரும் பெறுவதை உறுதிப்படுத்துதல்.
- முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்.
- கல்வி.

**2. விளக்குக : அ) மனித மாண்பு**

**ஆ) வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம்.**


**அ) மனித மாண்பு :**

- மனித மாண்பு என்பது சுயமரியாதை ஆகும். மனித மாண்பு என்பது முக்கியமான மனித உரிமை என்பதோடு இதிலிருந்தே அனைத்து அடிப்படை உரிமைகளும் தோன்றுகின்றன.
- மாண்பு என்பது கௌரவமான மேலான சிறந்த தகுதி ஆகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தின் மதிப்பு மிக்க ஓர் உறுப்பினர் என்பதை கருதுதல் வேண்டும்.

**ஆ) வாய்ப்பு மற்றும் கல்வியில் சமத்துவம் :**

- அனைத்து தனிமனிதர்களும் கல்வியினை பெறுவதற்கு வாய்ப்புகளை கொண்டிருத்தல் வேண்டும். அவர்களது ஆளுமையை மேம்படுத்த வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.
- சமூகத்தில் நாம் சமமாக நடத்தப்படுவதற்கு நமக்கு சமத்துவம் தேவைப்படுகிறது. நாம் சமமாக நடத்தப்பட்டால் மதிப்பையும் மாண்பையும் பெறுவோம்.

**மனவரைபடம்**




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB

அலகு 1

பொருளியல்

# உற்பத்தி

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்க

**1. உற்பத்தி என்பது**

அ) பயன்பாட்டை அழித்தல் ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்
இ) மாற்று மதிப்பு ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

**விடை: ஆ) பயன்பாட்டை உருவாக்குதல்**

**2. பயன்பாட்டின் வகைகளாவன**

அ) வடிவப் பயன்பாடு ஆ) காலப் பயன்பாடு
இ) இடப் பயன்பாடு ஈ) மேற்கண்ட அனைத்தும்

**விடை: ஈ) மேற்கண்ட அனைத்தும்**

**3. முதன்மைக் காரணிகள் என்பன ________**

அ) நிலம், மூலதனம் ஆ) மூலதனம், உழைப்பு
இ) நிலம், உழைப்பு ஈ) எதுவுமில்லை

**விடை: இ) நிலம், உழைப்பு**

**4. தொழில் முனைவோர் என அழைக்கப்படுபவர்**

அ) பரிமாற்றம் செய்பவர் ஆ) முகவர்
இ) அமைப்பாளர் ஈ) தொடர்பாளர்

**விடை: இ) அமைப்பாளர்**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|---|
| 1. | _______ என்பது பண்டத்திற்கான விருப்பங்களை நிறைவு செய்யும் சக்தியாகும். | **பயன்பாடு** |
| 2. | பெறப்பட்ட காரணிகள் என்பது _______ மற்றும் _______ ஆகும். | **முதலீடு, அமைப்பு** |
| 3. | _______ என்பது நிலையான அளிப்பினை உடையது. | **நிலம்** |
| 4. | _______ என்பது மனித உற்பத்தியில் ஓர் இடு பொருள். | **உழைப்பு** |
| 5. | ____ என்பது பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்திட மனித முயற்சியால் உருவாக்கப்பட்டதாகும். | **மூலதனம்** |

### III. பொருத்துக.

| | I | | விடைகள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | முதன்மை உற்பத்தி | அ | ஆடம் ஸ்மித் | **ஆ** | **மீன்பிடித்தல், சுரங்கத் தொழில்** |
| 2 | காலப் பயன்பாடு | ஆ | மீன்பிடித்தல், சுரங்கத் தொழில் | **ஈ** | **எதிர்கால சேமிப்பு** |
| 3 | நாடுகளின் செல்வம் | இ | தொழில் முனைவோர் | **அ** | **ஆடம் ஸ்மித்** |
| 4 | மனித மூலதனம் | ஈ | எதிர்கால சேமிப்பு | **உ** | **கல்வி, உடல்நலம்** |
| 5 | புதுமை புனைபவர் | உ | கல்வி, உடல்நலம் | **இ** | **தொழில் முனைவோர்** |

### IV. குறுகிய விடையளி

**1. உற்பத்தி என்றால் என்ன?**

**உற்பத்தி**

நுகர்வோரின் பயன்பாட்டுக்காக, மூலப்பொருளையும், மூலப்பொருள் அல்லாதனவற்றையும் ஒன்றிணைத்து, ஒரு பொருளை உருவாக்கும் செயலே **உற்பத்தியாகும்.**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. பயன்பாடு என்பது என்ன?**

**பயன்பாடு:**

**பயன்பாடு** என்பது, நமது தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவு செய்வதாகும்.

**3. பயன்பாட்டின் வகைகளை எழுதுக.**

**பயன்பாட்டின் வகைகள்:**

- வடிவப் பயன்பாடு
- இடப் பயன்பாடு
- காலப் பயன்பாடு

**4. உற்பத்திக் காரணிகளைக் கூறுக.**

**உற்பத்திக் காரணிகள்:**

**முதல் நிலை உற்பத்திக் காரணிகள்:**

- நிலம்
- உழைப்பு

**மூலப்பொருள்களிலிருந்து பெறப்பட்ட உற்பத்திக் காரணிகள்:**

- முதலீடு
- அமைப்பு

**5. உழைப்பு வரையறு.**

**உழைப்பு:**

"ஒரு பணியை கைமாறு எதிர்பார்த்து முழுமையாகவோ, பகுதியாகவோ உடல் அல்லது மனதால் மேற்கொள்ளும் முயற்சியே உழைப்பு". **- ஆல்பிரட் மார்ஷல்.**

**6. வேலை பகுப்பு முறை - வரையறு.**

**வேலை பகுப்பு முறை:**

ஓர் உற்பத்தியை நன்கு வரையறுக்கப்பட்ட வெவ்வேறு உட்பிரிவுகளாகப் பிரித்து அந்த உட்பிரிவுகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு தனிப்பட்ட உழைப்பாளி அல்லது உழைப்பாளர் குழுவினரிடம் ஒப்படைத்தலே **வேலைபகுப்பு முறை** எனப்படும்.

**7. மூலதனத்தின் வடிவங்கள் யாவை?**

**மூலதனத்தின் வடிவங்கள்:**

**பொருட்சார் மூலதனம்:**

இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள்

**பண மூலதனம்:**

வங்கி வைப்புகள், பங்குகள், பத்திரங்கள்

**மனித மூலதனம்:**

கல்வி, பயிற்சி, சுகாதாரம் ஆகியவற்றில் முதலீடுகள்.

**8. தொழில் முனைவோரின் பண்புகள் மூன்றினைக் கூறுக.**

**தொழில் முனைவோரின் பண்புகள்:**

- இலாபகரமான முதலீட்டு வாய்ப்புகளை அடையாளம் காணுதல்
- உற்பத்தி அலகின் இருப்பிடத்தை தீர்மானித்தல்
- புதுமைகளைஉருவாக்குதல்

## V. விரிவான விடையளி

**1. உற்பத்தியின் வகைகளை விரிவாக எழுதுக.**

**உற்பத்தியின் வகைகள்:**

உற்பத்தியில் மூன்று வகைகள் உள்ளன. அவை

**1. முதன்மை நிலை உற்பத்தி:**

- இயற்கையாகக் கிடைக்கும் பொருள்களை, நேரடியாகப் பயன்படுத்திச் செய்கின்ற செயல்பாட்டு நிலை **முதன்மை நிலை உற்பத்தி** எனப்படும். இதில் வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுவதால் **'வேளாண்மைத்துறை உற்பத்தி'** எனவும் கூறுவர்.
- வேளாண் தொடர்புடைய செயல்கள், வனப்பாதுகாப்பு, மீன்பிடித்தல், சுரங்கத்தொழில், எண்ணெய் வளம் பிரித்தெடுத்தல் ஆகியவை முதன்மை நிலை உற்பத்தி ஆகும்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**2. இரண்டாம் நிலை உற்பத்தி:**

- முதன்மை நிலையின் உற்பத்திப் பொருட்களை மூலப்பொருட்களாகப் பயன்படுத்தி, புதிய உற்பத்திப் பொருட்களை உருவாக்கும் செயல்பாடு **இரண்டாம் நிலை உற்பத்தி** எனப்படும். இதை **'தொழில்துறை உற்பத்தி'** எனவும் கூறுவர்.
- நான்கு சக்கர வாகனங்கள், ஆடைகள், இரசாயனப் பொருட்கள் தயாரிப்பு, பொறியியல் மற்றும் கட்டடப் பணிகள் இரண்டாம் நிலை உற்பத்தி ஆகும்.

**3. மூன்றாம் நிலை உற்பத்தி:**

- முதன்மை மற்றும் இரண்டாம் நிலைகளின் உற்பத்திப் பொருட்களைச் சேகரிப்பதும் பரிமாற்றம் செய்வதும் **மூன்றாம் நிலை உற்பத்தியாகும்**. சேவைக்கு முதலிடம் அளிக்கப்படுவதால் இதனை **'சேவைத்துறை'** எனவும் கூறுவர்.
- வாணிகம், வங்கி, காப்பீடு, போக்குவரத்து, செய்தித் தொடர்பு, சட்டம், நிர்வாகம், கல்வி, உடல்நலம் சார்ந்த நிறுவனங்கள் அனைத்தும் சேவைத்துறை நிறுவனங்கள்.

---

**2. நிலம் என்றால் என்ன? அதன் சிறப்பியல்புகளை விவரிக்க?**

**நிலம்:**

**'நிலம்'** என்ற உற்பத்திக் காரணி, இயற்கை வளங்கள் அனைத்தையும் அல்லது இயற்கை மனிதனுக்கு இலவசமாகக் கொடுத்திருக்கும் கொடை அனைத்தையும் குறிப்பதாகும்.

**நிலத்தின் சிறப்பியல்புகள்:**

**நிலம் இயற்கையின் கொடை:**

நிலமானது மனித உழைப்பினால் உருவானதன்று. அது மனிதனின் பரிணாம வளர்ச்சி தொடங்குவதற்கு முன்பே தோன்றியதாகும்.

**நிலத்தின் அளிப்பு நிலையானது:**

நிலத்தின் அளவை மாற்ற முடியாது. நிலத்தின் மேற்பரப்பிலும் எவ்வித மாற்றமும் செய்ய இயலாது.

**நிலம் அழிவில்லாதது:**

மனிதன் உருவாக்கிய அனைத்தும் அழிந்து போகக் கூடியது. ஆனால் நிலம் அழிவில்லாதது.

**நிலம் ஒரு முதன்மை உற்பத்திக் காரணி:**

எந்த உற்பத்திப் பொருளுக்கும் நிலமே அடிப்படை. தொழிற்சாலைக்கான மூலப்பொருட்கள், பயிர்கள் விளைவிக்க உதவுகிறது.

**நிலம் ஆற்றல் வாய்ந்தது:**

மனிதனால் அழிக்க முடியாத ஆற்றல்களை, நிலம் கொண்டுள்ளது. இயற்கை மாற்றங்களால் செழிப்புத்தன்மையில் மாற்றம் ஏற்படலாம். நிலத்தை முழுமையாக அழிக்க இயலாது.

---

**3. வேலை பகுப்பு முறையின் நன்மைகள் மற்றும் தீமைகளை எழுதுக.**

**வேலை பகுப்பு முறையின் நன்மைகள்:**

- ஒரே வேலையை மீண்டும் மீண்டும் செய்வதால் ஒருவர் அந்த வேலையில் திறன் மிக்கவராக மாறுகிறார்.
- நவீன இயந்திரங்கள் உற்பத்தியில் ஈடுபடுவதற்கு வழிவகுக்கிறது.
- காலமும் மூலப்பொருட்களும் திறமையாகப் பயன்படுத்தப் படுகின்றன.

**வேலை பகுப்பு முறையின் தீமைகள்:**

- ஒரே வேலையைத் திரும்ப திரும்பச் செய்வதால் வேலை சுவையற்றதாகவும், களிப்பற்றதாகவும் மாறுகிறது. மனிதத் தன்மையை அழிக்கிறது.
- ஒரு பகுதி வேலையை மட்டும் மேற்கொள்வதால் குறுகிய தேர்ச்சி மட்டுமே கிடைக்கும்.
- கைவினைப் பொருட்களின் வளர்ச்சி பாதிக்கும். ஒரு பொருளை முழுமையாக உருவாக்கிய மனநிறைவு கிடைப்பதில்லை.

---

**4. மூலதனத்தின் சிறப்பியல்புகளை விளக்குக.**

**மூலதனத்தின் சிறப்பியல்புகள்:**

- மூலதனம் செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி
- மனித முயற்சியால் உருவாக்கப்படுகிறது.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- மூலதனமின்றியும் உற்பத்தி நடைபெறும்.
- மூலதனம் அதிகம் இயங்கும் தன்மையுடையது.
- மூலதனம் ஆக்கமுடையது.
- மூலதனம் பலகாலம் (ஆண்டுகள்) நீடிக்கும்.
- மூலதனத்தை பயன்படுத்துவதன் நோக்கம் எதிர்காலத்தில் வருமானம் பெற வேண்டும் என்பதே.

## VI. செயல்திட்டம் (மாணவர்களுக்கானது)

1. **மாணவர்களை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை உற்பத்தித் தொடர்புடைய மாதிரிப் படங்களைச் சேகரித்துவரச் செய்து, ஒட்டச் செய்தல்.**
2. **மாணவர்களைத் தங்கள் வீட்டின் அருகிலுள்ள வேளாண்மை செய்யும் விவசாயிகளுடன் கலந்துரையாடி நிலம் மற்றும் அதன் தொடர்புடையவற்றை புகைப்படங்கள் எடுத்துத் தாளில் ஒட்டச் செய்தல்.**

## VII. வாழ்வியல் திறன்கள் (மாணவர்களுக்கானது)

1. **மாணவர்கள் தொழில் முனைவோர் பற்றி அறிந்து கொள்ள வகுப்பறையை ஒரு நிறுவனம் போல் அமைத்தல். மாணவர்கள் சிலரைத் தொழில் முனைவோர் போலவும் உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடுவது போலவும் நடிக்கச் செய்தல். ஆசிரியரும், மாணவர்களும் சமுதாய முன்னேற்றத்திற்குத் தொழில் முனைவோரின் பங்கு பற்றிக் கலந்துரையாடுதல்.**

# பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடு:

1. **நமது நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும்பங்கு வகிப்பவை ______ உற்பத்தி.**
   அ) முதன்மை நிலை ஆ) இரண்டாம் நிலை இ) மூன்றாம் நிலை **விடை: இ) மூன்றாம் நிலை**
2. **மற்ற உற்பத்திக் காரணிகளோடு ஒப்பிடும்போது ________ அழியக்கூடியதாக உள்ளது.**
   அ) மூலதனம் ஆ) உழைப்பு இ) நிலம் **விடை: ஆ) உழைப்பு**
3. **விளைபொருளாகிய பருத்தி ஆடையாக உருவாக்கப்படுவது ________ பயன்பாடு ஆகும்.**
   அ) காலப் ஆ) இடப் இ) வடிவப் **விடை: இ) வடிவப்**
4. **________ செயலற்ற ஓர் உற்பத்திக் காரணி.**
   அ) மூலதனம் ஆ) நிலம் இ) உழைப்பு **விடை: அ) மூலதனம்**
5. **சமுதாய மாற்றம் காணும் முகவர்**
   அ) தொழில் முனைவோர் ஆ) உற்பத்தியாளர் இ) நுகர்வோர் **விடை: அ) தொழில் முனைவோர்**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக. | விடைகள் |
|---|---|---|
| 1. | பொருளாதாரத்தில் _______ மற்றும் _______ இரண்டும் இன்றியமையாத செயல்கள். | **உற்பத்தி, நுகர்வு** |
| 2. | _______ பொருளாதாரம் கலப்புப் பொருளாதாரமாகும். | **இந்தியப்** |
| 3. | உள்ளீட்டுப் பொருள்கள் _______ காரணியாகும். | **உற்பத்திக்** |
| 4. | _______ பொருளியலின் தந்தை என அழைக்கப்படுகிறார். | **ஆடம் ஸ்மித்** |
| 5. | முதன்மை நிலை உற்பத்தி ___ துறை உற்பத்தி எனவும் அழைக்கப்படுகிறது. | **வேளாண்மை** |

| III. அ) பொருத்துக. | | | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | நிறுவனம் | அ | சேவைத் துறை | **ஆ** | **உற்பத்தியின் நான்காவது காரணி** |
| 2 | வேலைபகுப்பு முறை | ஆ | உற்பத்தியின் நான்காவது காரணி | **இ** | **ஆடம் ஸ்மித்** |
| 3 | காப்பீடு | இ | ஆடம் ஸ்மித் | **அ** | **சேவைத் துறை** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. சரியா / தவறா எனக் குறிப்பிடுக.

1. தொழில் முனைவோர் பல உற்பத்திக் காரணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படுபவர் ஆவார். **விடை : சரி**
2. நிலத்தின் மேற்பரப்பில் மாற்றம் **செய்ய இயலும்.** **விடை : தவறு**
   **சரியான கூற்று :** நிலத்தின் மேற்பரப்பில் எவ்வித மாற்றமும் **செய்ய இயலாது.**
3. உழைப்பு ஒரே **சீரானது**. **விடை : தவறு**
   **சரியான கூற்று:** உழைப்பு ஒரே **சீரானதல்ல.**
4. எளிமையாகக் கூறினால் மூலதனம் என்பது செல்வத்தைக் குறிக்கும். **விடை : சரி**
5. வேலைப் பகுப்பு முறை கைவினைப் பொருட்களின் வளர்ச்சியை **அதிகரிக்கிறது**. **விடை : தவறு**
   **சரியான கூற்று:** வேலைப் பகுப்பு முறை கைவினைப் பொருட்களின் வளர்ச்சியினைப் **பாதிக்கிறது**.

## V. பின்வரும் கூற்றுக்களை ஆய்ந்து சரியான விடையைத் தேர்வு செய்க.

**1. கூற்று** : நிலம் இயற்கையின் கொடை
**காரணம்** : நிலம் மனிதனால் உருவாக்கப்படாத பொருட்களை உள்ளடக்கியது.

அ) கூற்று சரி, காரணம் தவறு
ஆ) கூற்று தவறு, காரணம் சரி
இ) கூற்றும் காரணமும் சரி
ஈ) கூற்றும் காரணமும் தவறு.

**விடை : இ) கூற்றும் காரணமும் சரி**

**2. கூற்று** : உற்பத்தியில் உழைப்பு என்பது ஒரு செயல்படு காரணியாகும்.
**காரணம்** : நிலமோ, மூலதனமோ உழைப்பு இல்லாமல் அதிக உற்பத்தியை அளிக்க இயலும்.

அ) கூற்று தவறு, காரணம் சரி
ஆ) கூற்று சரி, காரணம் தவறு
இ) கூற்று காரணம் இரண்டும் சரி
ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு.

**விடை : ஆ) கூற்று சரி, காரணம் தவறு**

## VI. தவறான இணையைக் கண்டுபிடி.

| | | | |
|---|---|---|---|
| 1 | பொறியியல் மற்றும் கட்டடம் | - | இரண்டாம் நிலை உற்பத்தி |
| 2 | எதிர்காலத்தேவைக்காக பொருட்கள் சேகரிப்பு | - | இடப் பயன்பாடு |
| 3 | நாடுகளின் செல்வம் | - | 1776 |
| 4 | பணமூலதனம் | - | வங்கிவைப்புகள், பங்குகள் |

**விடை: 2. எதிர்காலத் தேவைக்காக பொருட்கள் சேகரிப்பு - இடப் பயன்பாடு**

## பொருந்தாதை கண்டுபிடி

1. வங்கி, போக்குவரத்து, [illegible] தொடர்பு
2. காற்று, நீர், மலை, ஆடை **விடை : ஆடை**

## VIII. ஓரிரு வாக்கியங்களில் விடையளி

**1. பொருளாதாரத்தில் 'உற்பத்தி' என்ற சொல் எதைக் குறிக்கின்றது?**
**உற்பத்தி:**

பொருளாதாரத்தில் **உற்பத்தி** என்ற சொல், மாற்றத்தக்க மதிப்புடைய பொருள்களையும் சேவைகளையும் உருவாக்குவதைக் குறிக்கிறது.

**2. கலப்பு பொருளாதாரம் என்றால் என்ன?**
**கலப்பு பொருளாதாரம்:**

பொருளாதாரத்தில் தனியார் துறை நிறுவனங்களும் பொதுத்துறை நிறுவனங்களும் ஒன்றாக இணைந்து செயல்படுவது **கலப்பு பொருளாதாரம்** ஆகும்.

**எடுத்துக்காட்டு**: இந்தியா



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**3. உற்பத்திக்கு உதவுகின்ற உள்ளீட்டுப் பொருட்கள் யாவை?**

**உள்ளீட்டுப் பொருட்கள்:**

- நிலம்
- உழைப்பு
- முதலீடு

**4. ஆடம் ஸ்மித்தின் சிறந்த இரு படைப்பு நூல்கள் எவை?**

- நன்னெறி கருத்து உணர்வுக் கொள்கை
- நாடுகளின் செல்வமும் அவற்றை உருவாக்குகின்ற காரணிகளும் - ஓர் ஆய்வு

**5. மார்ஷலின் கூற்றுப்படி 'மூலதனம்' என்றால் என்ன?**

"இயற்கையின் கொடை தவிர்த்த வருமானம் அளிக்கக் கூடிய பிற வகைச் செல்வங்களே **மூலதனம்** ஆகும்" - மார்ஷல்

## IX. விரிவான விடையளி

**1. 'மூலதனம்' குறித்த சிறு குறிப்பு வரைக.**

எளிமையாகக் கூறினால் மூலதனம் என்பது செல்வம். செல்வத்தை உற்பத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட செல்வம்.

**வகைகள்:**

1. பருப்பொருள் மூலதனம் - இயந்திரங்கள், கருவிகள், கட்டிடங்கள்
2. பண மூலதனம் - வங்கிவைப்புகள், பங்குகள், பத்திரங்கள்
3. மனித மூலதனம் - கல்வி, பயிற்சி, சுகாதார முதலீடுகள்

**சிறப்பியல்புகள்:**

- செயலற்ற உற்பத்திக் காரணி
- மனித முயற்சியால் உருவாக்கப்படுவது
- அதிக இயங்கும் தன்மையுடையது
- அளிப்பு நெகிழுந்தன்மையுடையது
- ஆக்கமுடையது
- பல ஆண்டுகள் நீடுக்கும்

**2. உழைப்பின் சிறப்பியல்புகள் யாவை?**

- உழைப்பு என்பது செயற்படு காரணியாகும்.
- ஒரே சீரானதல்ல, ஆளுக்கு ஆள் மாறுபடும்.
- உழைப்பை உழைப்பவரிடமிருந்து பிரிக்க இயலாது.
- உழைப்பு இடம் பெயரக் கூடியது.
- தனியாக உழைப்பவரிடம் பேரம் பேசும் ஆற்றல் குறைவு. சங்கம் மூலம் பேரம் பேசும் ஆற்றல் அதிகம்.

**3. பயன்பாட்டின் வகைகளை விவரி.**

**வடிவப் பயன்பாடு:**

விளை பொருளின் வடிவம் மாற்றப்படும் பொழுது பயன்பாடு அதிகமாகிறது.

**எ.கா**: விளை பொருளாகிய பருத்தி ஆடையாக மாறும்போது தேவையும், பயன்பாடும் மிகுதியாகிறது.

**இடப் பயன்பாடு:**

ஒரு விளைபொருள் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு செல்லப்படும் போது பயன்பாடு அதிகமாகிறது.

**எ.கா**: விளைபொருளான அரிசி தமிழ்நாட்டிலிருந்து கேரளாவுக்கு கொண்டு செல்லப்படும் பொழுது தேவையும் பயன்பாடும் மிகுதியாகிறது.

**காலப் பயன்பாடு:**

ஒரு விளைபொருளை எதிர்காலத் தேவைக்காகச் சேமித்து வைக்கும்போது அதன் பயன்பாடு அதிகமாகிறது.

**எ.கா**: ஆண்டு முழுவதும் பயன்படும் உணவு தானியங்கள் சேமித்து வைக்கப்படுவதால் தேவையும் பயன்பாடும் மிகுதியாகிறது.




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## மனவரைபடம்




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

# பருவம் - 2

## பாடப் பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | விஜயநகர், பாமினி அரசுகள் | 79 |
| 2 | முகலாயப் பேரரசு | 85 |
| 3 | மராத்தியர்கள் மற்றும் பேஷ்வாக்களின் எழுச்சி | 91 |
| | **புவியியல்** | |
| 1 | வளங்கள் | 97 |
| 2 | சுற்றுலா | 104 |
| | **குடிமையியல்** | |
| 1 | மாநில அரசு | 111 |
| 2 | ஊடகமும் ஜனநாயகமும் | 117 |

TNPSCJOB

வரலாறு

# அலகு 1 விஜயநகர், பாமினி அரசுகள்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. சங்கம வம்சத்தின் மிக சிறந்த ஆட்சியாளர் யார்?**

அ) புக்கர் ஆ) தேவராயா - II
இ) ஹரிஹரர் - II ஈ) கிருஷ்ண தேவராயர்

**விடை : ஆ) தேவராயா - II**

**2. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?**

அ) யானை ஆ) குதிரை
இ) பசு ஈ) மான்

**விடை : ஆ) குதிரை**

**3. சங்கம வம்சத்தின் கடைசி அரசர் யார்?**

அ) ராமராயர் ஆ) திருமலதேவராயா
இ) இரண்யம் தேவராயர் ஈ) இரண்டாம் விருபாக்சராயர்

**விடை : ஈ) இரண்டாம் விருபாக்சராயர்**

**4. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்தவர்**

அ) சாளுவ நரசிம்மர் ஆ) இரண்டாம் தேவராயர்
இ) குமார கம்பண்ணா ஈ) திருமலைதேவராயர்

**விடை : இ) குமார கம்பண்ணா**

**5. பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும் விளங்கியவர்**

அ) அலாவுதீன் ஹசன்விரா ஆ) முகம்மது - I
இ) சுல்தான் பெரோஸ் ஈ) முஜாஹித்

**விடை : இ) சுல்தான் பெரோஸ்**

| II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|
| 1. ஆரவீடு வம்சத்தின் தலைநகரம் ................. | **பெனுகொண்டா** |
| 2. விஜயநகரப் பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு ................ என்று பெயர் | **வராகன்** |
| 3. மகமது கவான் வெடிமருந்து தயாரிக்கவும் அதனைப் பயன்படுத்துவது பற்றி விளக்குவதற்காகவும் .......... வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார். | **பாரசீக** |
| 4. விஜயநகர் நிர்வாகத்தில் **கௌடா என்ற** கிராம விவகாரங்களை ................ கவனித்தார். | **கிராமத்தலைவர்** |

### III. பொருத்துக

| அ | | ஆ | | விடை | |
|---|---|---|---|---|---|
| 1 | விஜயநகரா | அ | ஒடிசாவின் ஆட்சியாளர் | **ஈ** | **வெற்றியின் நகரம்** |
| 2 | பிரதாபருத்ரா | ஆ | அஷ்டதிக்கஜம் | **அ** | **ஒடிசாவின் ஆட்சியாளர்** |
| 3 | கிருஷ்ண தேவராயா | இ | பாண்டுரங்க மகாமத்தியம் | **ஆ** | **அஷ்டதிக்கஜம்** |
| 4 | அப்துர் ரசாக் | ஈ | வெற்றியின் நகரம் | **உ** | **பாரசீக சிற்ப கலைஞர்** |
| 5 | தெனாலிராமகிருஷ்ணா | உ | பாரசீக சிற்ப கலைஞர் | **இ** | **பாண்டுரங்க மகாமத்தியம்** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக: பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்

1. **கூற்று** : இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது.
**காரணம்** : விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையை கொண்டிருந்தது.
அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
இ) காரணம் மற்றும் கூற்று தவறு ஈ) காரணம் மற்றும் கூற்று சரி
**விடை : ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

2. **தவறான இணையைக் கண்டறியவும்**
அ) பட்டு - சீனா
ஆ) வாசனைப் பொருட்கள் - அரேபியா
இ) விலைமதிப்பற்ற கற்கள் - பர்மா
ஈ) மதுரா விஜயம் - கங்கா தேவி
**விடை : ஆ) வாசனைப் பொருட்கள் - அரேபியா**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி :**
அ) ஹரிஹரர் - II ஆ) மகமுது - I
இ) கிருஷ்ண தேவராயர் ஈ) தேவராயா - I
**விடை : ஆ) மகமுது - I**

4. **கீழ்க்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டு காட்டவும்**
I. பச்சைக்கலந்த நீலவண்ணத்தைக் கொண்ட விலையுயர்ந்த கற்களால் ஆன அரியணை பாரசீக அரசர்களின் அரசவையை அலங்கரித்தன என பிர்தௌசி தன்னுடைய ஷா நாமா எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.
II. விஜயநகர, பாமினி அரசர்களுக்கிடையே மோதல்கள் ஏற்படுவதற்குக் கிருஷ்ணாதுங்கபத்ரா நதிகளுக்கு இடைப்பட்ட செழிப்பான பகுதி மற்றும் கிருஷ்ணாகோதாவரி நதிகளுக்கு இடைப்பட்ட கழிமுகப் பகுதியே காரணமாக அமைந்தன.
III. முதலாம் முகமது முல்தானில் கல்வி பயின்றார்.
IV. முகமது கவான் மூன்றாம் முகமதுவின் கீழ் தனித்தன்மை மிக்க பிரதமஅமைச்சராக பணியாற்றினார்.
அ) I, II மற்றும் IV சரி ஆ) I, II மற்றும் III சரி
இ) II, III மற்றும் IV சரி ஈ) III மற்றும் IV சரி
**விடை : அ) I, II மற்றும் IV சரி**

| V. சரியா? தவறா? | | விடைகள் |
|---|---|---|
| 1. | பாமினி அரசைத் தோற்றுவித்தவர்கள் ஹரிஹரர் மற்றும் புக்கர் ஆவார்கள் | **தவறு** |
| 2. | இருபது ஆண்டுகள் ஆட்சி செய்த கிருஷ்ணதேவராயர் சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த அரசராவார் | **தவறு** |
| 3. | அஸ்டதிக்கஜத்தில் அல்லசானி பெத்தண்ணா குறிப்பிட தகுந்தவராவார் | **சரி** |
| 4. | விஜயநகரப் பேரரசில் அரசுரிமை என்பது பரம்பரையாகவும், பிறப்புரிமையின் அடிப்படையிலும் வழங்கப்பட்டது. | **சரி** |
| 5. | பாமினி அரசில் 18 முடியரசுகள் இருந்தன | **சரி** |

## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்

1. **விஜயநகர் பேரரசின் நான்கு வம்சங்களின் மிகச் சிறந்த ஆட்சியாளர்களை எழுதுக.**
- சங்கம் வம்சம் - தேவராயர் -II
- சாளுவ வம்சம் - சாளுவ நரசிம்மா
- துளுவ வம்சம் - கிருஷ்ணதேவராயர்
- ஆரவீடு வம்சம் - திருமலைதேவராயர்

2. **தலைக்கோட்டைப் போரைப் பற்றி எழுதுக.**
- விஜயநகருக்கு எதிராகப் போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர்.
- எதிரிகளின் கூட்டுப் படைகள் 1565 -ல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரப் படைகளை எதிர் கொண்டனர்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- ராக்சச தங்கடி (தலைக்கோட்டைப் போர்) என்றறியப்பட்ட இப்போரில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டு, கொள்ளையடிக்கப்பட்டது. இறுதியில் விஜயநகரப் பேரரசு அழிக்கப்பட்டது.

**3. விஜயநகர அரசின் அரசமைப்பு முறையைப் பற்றி எழுதுக.**

- பேரரசு பல்வேறு மண்டலங்கள் (மாநிலம்) நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்) கிராமங்கள் என பிரிக்கப்பட்டிருந்தது.
- ஒவ்வொரு மண்டலமும் மண்டலேஸ்வரா என்ற ஆளுநரின் கீழிருந்தது.
- கிராமம் நிர்வாகத்தின் மிகச்சிறிய அலகாகும். கிராமத்தை கௌடா என்ற கிராமத்தலைவர் நிர்வாகித்தார்.

**4. தக்காண சுல்தானத்தின் ஐந்து சுதந்திர அரசுகள் யாவை?**

- பிடார்
- அகமதுநகர்
- பீரார்
- கோல்கொண்டா
- பிஜப்பூர்

**5. அலாவுதீன் ஹசன் ஷா கல்விக்கு ஆற்றிய பங்களிப்பைக் கூறுக.**

- அலாவுதீன் ஹசன் ஷா, அலாவுதீன் கில்ஜியின் படைத் தளபதி ஜாபர்கான் முயற்சியால் மூல்தானில் கல்வி கற்றார். அரசரான பின் ஒரு பள்ளியை நிறுவினார்.
- பிரபுக்கள் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகள் போர்ப் பயிற்சி பெறுவதற்காக பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்தினார்.

## VII. விரிவாக விடையளிக்க

**1. கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.**

- கிருஷ்ணதேவராயர் ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன் துங்கபத்ரா நதிப் பள்ளத்தாக்குப் பகுதியில் சுதந்திரமாக செயல்பட்டு வந்த தலைவர்களை அடக்கினார். இதுவே அவரது முதல் மற்றும் தலையாய பணியாக இருந்தது.
- பின்னர் குல்பர்காவை கைப்பற்றினார்.
- சிறைவைக்கப்பட்டிருந்த பாமினி சுல்தான் முகமது ஷா-வை விடுவித்து மீண்டும் அரியணையில் அமர்த்தினார்.
- ஓடிசாவைச் சேர்ந்த கஜபதி வம்ச அரசர் பிராதாபருத்திரனோடு போர் மேற்கொண்டார்.
- போர்ச்சுக்கீசிய வீரர்களின் உதவியோடு கோல்கொண்டா சுல்தானை தோற்கடித்தார்.
- பிஜப்பூர் சுல்தானிடமிருந்து ரெய்ச்சூரைக் கைப்பற்றினார்
- மழைநீரைச் சேமிக்க நீர்ப்பாசன குளங்கள் நீர்த்தேக்கங்களை உருவாக்கினார்.
- கிருஷ்ணசாமி கோயில், வித்தலசாமி ராமசாமி போன்ற புகழ்பெற்ற கோவில்களையும் வலிமைமிக்க கோட்டைகளையும் கோபுரங்களையும் கட்டினார்.
- பெரும் படையை நிறுவிய அவர் அரேபியாவிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தார்.
- போர்ச்சுக்கீசிய, அராபிய வணிகர்களுடன் கொண்டிருந்த நட்புறவால் நாட்டின் வருமானம் அதிகரித்தது.

## VIII. உயர் சிந்தனை வினா

**விஜயநகர் பேரரசின் வீழ்ச்சிக்கான காரணங்கள் மற்றும் பாமினி சுல்தான்களின் பங்களிப்பை ஆராய்க.**

கிருஷ்ண தேவராயருக்குப் பின் விஜயநகருக்கு எதிராக போர் புரிவதற்காகத் தக்காண சுல்தான்கள் ஓர் அணியில் திரண்டனர். எதிரிகளின் கூட்டுப்படைகள் 1565-ல் தலைக்கோட்டை என்னுமிடத்தில் விஜயநகரை எதிர்கொண்டன. இதில் விஜயநகரம் தோற்கடிக்கப்பட்டது. விஜயநகரம் இருந்த இடம் தற்போது ஹம்பி என அழைக்கப்படுகிறது.

பாமன்ஷாவைத் தொடர்ந்து முதலாம் முகமது ஷா அரச பதவி ஏற்றார். விஜயநகரோடு அவர் மேற்கொண்ட இரு போர்களினால் பயனேதும் ஏற்படவில்லை. ஆனால் 1368-ல் வாரங்கல் அரசரோடு போரிட்டதின் மூலம் கோல்கொண்டா கோட்டை, பச்சை கலந்த நீலவண்ணக் கற்களால் செய்யப்பட்ட சிம்மாசனம் இழப்பீடாக பெற்றார். இச்சிம்மாசனமே பாமினி சுல்தான்களின் அரியணை ஆயிற்று.

## IX. வரைபடம்

**1. விஜயநகர் மற்றும் பாமினி அரசுகளின் எல்லைகளைக் குறிப்பிடுக.**

**(வரைபடப் பயிற்சி புத்தகத்தை பார்க்கவும்)**



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## X. கட்டக வினாக்கள்

1. **180 வருடத்திற்கு மேலாக ஆட்சிபுரிந்த 18 முடியரசுகளைப் பட்டியலிடுக**
பாமினி அரசுகள்

2. **கிருஷ்ண தேவராயருக்குப் பிறகு ஆட்சியில் அமர்ந்த பாமினி சுல்தானைக் குறிப்பிடுக**
முகமது ஷா

3. **கிருஷ்ணதேவராயர் சமஸ்கிருதத்தில் எழுதிய புத்தகத்தைக் கூறுக**
ஜாம்பவதி கல்யாணம்

4. **ஹசன் பாமன் ஷா தமது தலைநகரை எங்கு மாற்றினார்?**
குல்பர்கா

## XI. மாணவர் செயல்பாடு (மாணவர்களுக்கானது)

1. **தமிழ்நாட்டில் விஜயநகரப் பேரரசின் கலை மற்றும் கட்டடக் கலையின் வடிவில் அமைந்துள்ள கோவில்களைப் பற்றிய தகவல்களைச் சேகரித்து வருக.**

2. **வகுப்பறையில் தெனாலிராம கிருஷ்ணாவின் கதைகளை வகுப்பில் படித்துக் காட்டுக.**

# பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. **சமஸ்கிருத மொழியில் கிருஷ்ணதேவராயரால் எழுதப்பட்ட நாடகத்தின் பெயர்.**
அ) அமுக்தமால்யதா ஆ) ஜாம்பவதி கல்யாணம்
இ) மதுரை விஜம் ஈ) இவற்றில் எதுவுமில்லை
**விடை : ஆ) ஜாம்பவதி கல்யாணம்**

2. **ஏனைய அமைச்சர்களின் பணியை மேற்பார்வையிட்டவர் ............**
அ) வஸிரி - குல் ஆ) பேஷ்வா
இ) நஷீர் ஈ) கொத்தவால்
**விடை : அ) வஸிரி-குல்**

3. **பாமினி அரசை நிறுவியவர் .......................**
அ) சுல்தான் பெரோஸ் ஆ) முகமது கவான்
இ) அலா-வு-தீன் ஹசன் ஷா ஈ) முஜாகித்
**விடை : இ) அலா-வு-தீன் ஹசன் ஷா**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | கோல்கொண்டா கோட்டையின் மிக உயரமான இடம் ............ | **பால ஹிசார்** |
| 2. | பாரசீக அரசர்களின் அணிகலன்களால் அலங்கரிக்கப்பட்ட சிம்மாசனங்களில் ஒன்று என குறிப்பிட்டது ............. | **பிர்தௌசியின் ஷா நாமா** |
| 3. | ஒவ்வொரு மண்டலமும் .................. என்ற ஆளுநரின் கீழிருந்தது. | **மண்டலேஸ்வரா** |
| 4. | கிழக்கு கர்நாடகத்தில் .......... நதிக்கரையில் விஜயநகரம் காணப்பட்டது. | **துங்கபத்திரா** |
| 5. | நிர்வாகத்தின் மிகச்சிறிய அலகாக இருந்தது ........ | **கிராமம்** |

| III. பொருத்துக | | | | விடைகள் |
|---|---|---|---|---|
| 1 | அமிர்-இ-ஜீம்லா | அ | உதவி நிதியமைச்சர் | **இ** |
| 2 | வக்கீல் | ஆ | நாட்டின் பிரதம மந்திரியோடு இணைந்து செயல்படுபவர் | **ஈ** |
| 3 | பேஷ்வா | இ | நிதியமைச்சர் | **ஆ** |
| 4 | நஷீர் | ஈ | துணையதிகாரியாக செயல்பட்டவர் | **அ** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டுக் காட்டவும்

1. **கூற்று** : கிருஷ்ணதேவராயர் போர்த்துகீசிய அராபிய வணிகர்களுடன் சிறந்த நட்புறவை கொண்டிருந்தார்
**காரணம்** : அதனால் சுங்கவரிகள் மூலம் நாட்டின் வருமானம் அதிகரித்தது.

அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
இ) காரணம் மற்றும் கூற்று தவறு
ஈ) காரணம் மற்றும் கூற்று சரி **விடை : ஆ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்**

2. **பொருந்தாததை கண்டுபிடிக்கவும்.**
மண்டலங்கள், நாடுகள், ஸ்தலங்கள், கிராமங்கள், ஜக்கம்மா **விடை : ஜக்கம்மா**

3. **கீழ்காணும் கூற்றுகளை ஆய்க. பொருத்தமான விடையை (✓) டிக் இட்டு காட்டவும்.**

I. சுல்தான்களின் சூழ்ச்சிகளால் விஜயநகர அரசு வீழ்ச்சியுற்றது.
II. விஜய நகர அரசை தோற்றுவித்தவர் மூன்றாம் முகமது.
III. மகமது கவான் கவிஞரும் உரைநடை எழுத்தாளருமாவார்.
III. அலாவுதீன்-ஷசன் 20 ஆண்டுகள் ஆட்சி செய்தார்.

அ) I, III சரி ஆ) I, II மற்றும் III சரி
இ) III, IV சரி ஈ) I, IV சரி **விடை : ஆ) I, III சரி**

| | V. சரியா? தவறா? | விடைகள் |
|---|---|---|
| 1. | கட்டடக் கலைக்குப் பாமினி சுல்தான்கள் ஆற்றிய பங்களிப்பை குல்பர்காவில் காணலாம். | சரி |
| 2. | முதலாம் முகமது தமது இராணுவ நடவடிக்கைகளுக்கும் நிர்வாகச் சீர்திருத்தங்களுக்கும் பெயர் பெற்றவராவார். | தவறு |
| 3. | விஜயநகரப் பேரரசு உலகம் அறிந்திருந்த மிகவும் செல்வச் செழிப்பு மிக்க அரசுகளில் ஒன்றாகும். | சரி |

## VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளிக்கவும்

1. **கோல்கொண்டா கோட்டை பற்றி சிறு குறிப்பு வரைக.**
கோல்கொண்டா கோட்டையானது ஹைதராபாத்திலிருந்து 11கி.மீ தொலைவில் ஒரு குன்றின் மீது 120 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. ஒலி தொடர்பான கட்டடக்கலை அம்சங்களுக்கு இக்கோட்டை பெயர் பெற்றதாகும். கோட்டையின் மிக உயரமான இடம் பால ஹிசார் ஆகும்.

2. **கிருஷ்ண தேவராயர் கட்டிய கோயில்களின் பெயர்களை கூறுக.**
- கிருஷ்ணசாமி கோவில்
- ராமசாமி கோவில்
- வித்தலசாமி கோவில்

## VII. விரிவான விடையளி

1. **விஜயநகர பேரரசின் பொருளாதாரநிலை குறித்து ஒரு பத்தியில் விடையளி.**
- உலகம் அறிந்திருந்த மிகவும் செல்வச்செழிப்பு மிக்க அரசுகளில் ஒன்று விஜயநகரப்பேரரசு.
- 15ம், 16ம் நூற்றாண்டுகளில் பேரரசிற்கு வருகைபுரிந்த பல அயல்நாட்டுப் பயணிகள், தங்கள் பயணக்குறிப்புகளில் பேரரசின் செல்வம், மேன்மை குறித்து எழுதியுள்ளனர்.
- விஜயநகரப் பேரரசர்கள் வராகன் என்னும் பெயரில் அதிக எண்ணிக்கையிலான தங்க நாணயங்களை வெளியிட்டனர்.




TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## மனவரைபடம்




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com

# பருவம் - 3

## பாடப் பொருளடக்கம்


| அலகு | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **வரலாறு** | |
| 1 | புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும் | 123 |
| 2 | தமிழ்நாட்டில் கலையும் கட்டடக் கலையும் | 130 |
| 3 | தமிழகத்தில் சமணம், பௌத்தம், ஆசீவகத் தத்துவங்கள் | 138 |
| | **புவியியல்** | |
| 1 | கண்டங்களை ஆராய்தல் – வடஅமெரிக்கா மற்றும் தென் அமெரிக்கா | 146 |
| 2 | நிலவரைபடத்தை கற்றறிதல் | 160 |
| 3 | இயற்கை இடர்கள் – பேரிடர் மேலாண்மை நடவடிக்கைகளை புரிந்து கொள்ளல் | 168 |
| | **குடிமையியல்** | |
| 1 | பெண்கள் மேம்பாடு | 175 |
| 2 | சந்தை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு | 180 |
| 3 | சாலைப் பாதுகாப்பு | 185 |
| | **பொருளியல்** | |
| 1 | வரி மற்றும் அதன் முக்கியத்துவம் | 190 |

TNPSCJOB

வரலாறு

# அலகு 1 புதிய சமயக் கருத்துக்களும் இயக்கங்களும்

## பகுதி I - புத்தக வினாக்கள்

### I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

**1. கீழ்க்காண்பவருள் யார் தன்னை தாய் யசோதாவாக பாவித்துக் கொண்டு கிருஷ்ணனின் மேல் பாடல்களைப் புனைந்துள்ளார் ?**

அ) பொய்கையாழ்வார் ஆ) பெரியாழ்வார்

இ) நம்மாழ்வார் ஈ) ஆண்டாள் **விடை: ஆ) பெரியாழ்வார்**

**2. அத்வைதம் எனும் தத்துவத்தை போதித்தவர் யார்?**

அ) இராமானுஜர் ஆ) இராமாநந்தர்

இ) நம்மாழ்வார் ஈ) ஆதி சங்கரர் **விடை: ஈ) ஆதி சங்கரர்**

**3. பக்திச் சிந்தனையை ஒரு மக்கள் இயக்கமாக வட இந்தியாவில் பரவச் செய்தவர் யார்?**

அ) வல்லபாச்சாரியார் ஆ) இராமானுஜர்

இ) இராமாநந்தர் ஈ) சூர்தாஸ் **விடை: இ) இராமாநந்தர்**

**4. சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கியவர் யார்?**

அ) மொய்னுதீன் சிஸ்டி ஆ) சுரவார்டி

இ) அமீர் குஸ்ரு ஈ) நிஜாமுதின் அவுலியா

**விடை: அ) மொய்னுதீன் சிஸ்டி**

**5. சீக்கியர்கள் தங்களின் முதல் குரு என யாரைக் கருதுகின்றனர்?**

அ) லேனா ஆ) குரு அமீர் சிங்

இ) குரு நானக் ஈ) குரு கோவிந் சிங் **விடை: இ) குரு நானக்**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | பெரியாழ்வாரின் தொடக்ககாலப் பெயர் ......... | **விஷ்ணு சித்தர்** |
| 2. | சீக்கியர்களின் புனிதநூல் ........ ஆகும். | **குரு கிரந்சாகிப்** |
| 3. | மீராபாய் ......... என்பாரின் சீடராவார் | **ரவிதாஸ்** |
| 4. | என அறியப்படுகிறது... என்பாரின் தத்துவம் | **இராமானுஜர்** |
| 5. | தர்பார் சாகிப் குருத்வாரா பாகிஸ்தானின் ...... என்ற இடத்தில் அமைந்துள்ளது. | **கர்தார்பூர்** |

### III. பொருத்துக

| I | | II | | விடைகள் | |
|---|---|---|---|---|---|
| 1 | பாகல் | அ | கபீர் | **ஈ** | **குரு கோவிந் சிங்** |
| 2 | இராமசரிதமானஸ் | ஆ | இராமானுஜர் | **உ** | **துளசிதாசர்** |
| 3 | ஸ்ரீவைஷ்ணவம் | இ | அப்துல் வகித் அபுநஜிப் | **ஆ** | **இராமானுஜர்** |
| 4 | கிரந்தவளி | ஈ | குரு கோவிந் சிங் | **அ** | **கபீர்** |
| 5 | சுரவார்டி | உ | துளசிதாசர் | **இ** | **அப்துல் வகித் அபுநஜிப்** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. சரியான இணையைத் / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

**1.**

| | | |
|---|---|---|
| ஆண்டாள் | - | திருவில்லிபுத்தூர் |
| துக்காராம் | - | வங்காளம் |
| சைதன்யதேவா | - | மகாராஷ்டிரா |
| பிரம்ம சூத்திரம் | - | வல்லபாச்சாரியார் |
| குருத்வாராக்கள் | - | சீக்கியர்கள் |

**விடை: 1. ஆண்டாள் - திருவில்லிபுத்தூர்**
**5. குருத்வாராக்கள் - சீக்கியர்கள்**

**2.** **கூற்று:** குரு கோவிந் சிங்கிற்குப் பின்னர் புனித நூலான குரு கிரந்த் சாகிப் குருவாகக் கருதப்பட்டது.
**காரணம் :** குரு கிரந்த் சாகிப் நூலைத் தொகுத்தவர் குரு கோவிந் சிங்.
அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல.
ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.
இ) கூற்று சரி, காரணம் தவறு.
ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு. **விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு.**

**3.** **பொருந்தாததைக் கண்டுபிடி.**
பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார். **விடை: ஆண்டாள்**

## V. சரியா? தவறா? காண்

1. இஸ்லாமியப் பண்பாடு பரவ சூபியிஸம் காரணமாயிற்று. **விடை: சரி**
2. இடைக்காலத்தின் தொடக்கத்தில் நன்கறியப்பட்டிருந்த சிஸ்டி அமைப்பைச் சார்ந்த சூபி, நிஜாமுதீன் அவுலியா என்பவராவார். **விடை: சரி**
3. குருநானக், சீக்கியர்களின் முதல் குருவாகக் கருதப்படுகிறார். **விடை: சரி**
4. கடவுளை உய்த்துணர உணர்சிகரமான பக்தியும் தீவிர தியானமுமே சாத்தியம் என சூபிக்கள் நம்பினர். **விடை: சரி**
5. அடிப்படை தமிழ் சைவப் புனித நூல்கள் 12 ஆகும். **விடை: சரி**

## VI. குறுகிய விடையளி

**1. திருமுறை பற்றி நீவிர் அறிவது என்ன?**
**திருமுறை:**
- திருமுறை சைவப் புனித நூல்களின் அடிப்படை.
- 63 நாயன்மார்களில் ஒருவரான நம்பி ஆண்டார் நம்பி திருமுறையைத் தொகுத்தார்.
- திருமுறை 12 நூல்களைக் கொண்டுள்ளது (11 நூல்கள் நம்பி ஆண்டார் நம்பி, 12வது நூல் சேக்கிழார் - பெரியபுராணம்)

**அவர்களில் மு[illegible]தம்**
**நாயன்மார்கள்:**
- நாயன்மார்கள் 63 பேராவர் (சைவ அடியார்கள்)
- ஞானசம்பந்தர், அப்பர், சுந்தரர் (மும்மூர்த்திகள்) முக்கியமானவர்கள்

**3. சீக்கிய மதத்தைத் தோற்றுவிக்க குருநானக் எவ்விதம் உதவினார்?**
**சீக்கிய மதம்:**
- குருநானக்கின் போதனைகளே புதிதாக நிறுவப்பட்ட சீக்கிய மதத்தின் மூலக்கோட்பாடாக அமைந்தது.
- 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அவர் நிறுவினார்.
- நானக் வேதச் சடங்குகள், சாதிப்பாகுபாடுகள் ஆகியவை மீது வெறுப்புக் கொண்டிருந்தார்.

**4. பண்டரிபுரம் விதோபா கோவிலுக்கு, துக்காராம் எவ்விதம் பணியாற்றினார்?**
**துக்காராமும் விதோபா கோவிலும்:**
- துக்காராம் (கவிஞர், திருத்தொண்டர் - மகாராஷ்டிரா) அவர் இயற்றிய ஆன்மீகப் பாடல்களுக்காகவே நன்கு அறியப்பட்டிருந்தார்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- அவருடைய பாடல்களான அபங்கா (அல்லது) கீர்த்தனைகள் விதோபா குறித்து இயற்றப்பட்டது (விஷ்ணுவின் அவதாரம்).
- விதோபா கோவில் பந்தர்பூரில் உள்ளது. (சோலாப்பூர் மாவட்டம், மகாராஷ்டிரா)

**5. கபீரின் சமயக்கருத்துக்கள் கீழ்நிலை சாதிகளைச் சார்ந்தோருக்கு ஏற்புடையதாயிற்று என்பதை முன்னிலைப்படுத்து.**

**கபீரின் சமயக்கருத்துக்கள்:**

- பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் கொடுத்திருந்தன. ஆனால் கபீர் கடவுள் ஒருவரே என்றும், வடிவமற்றவர் என்றும் நம்பினார்.
- கபீர் சமயம், சாதி, செல்வம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடுகளை கண்டனம் செய்தார். பொருளற்ற சடங்கு முறைகளையும் அவர் கண்டனம் செய்தார்.

## VII. விரிவான விடையளி

**1. தென்னிந்திய மற்றும் வட இந்தியப் பகுதிகளில் பக்தி இயக்கத்திற்கு சான்றோர் பலரது பங்களிப்பினைப் பற்றிக் கூறு.**

**பக்தி இயக்கத்திற்கு சான்றோர் பலரின் பங்களிப்பு:**

- கடவுளின் மீதான முழுமையான பக்தியே மனிதனை வாழ்வின் இடர்ப்பாடுகளிலிருந்து காத்து முக்தியை அருளுமென பக்தி இயக்கங்களை நிறுவிய சான்றோர்கள் கருதினர்.
- கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் பக்தி இயக்கம் அல்லது வழிபாட்டு முறைகளிலான புத்தெழுச்சி தென்னிந்தியாவில் தொடங்கிற்று. ஆண், பெண் கடவுளர்களின் பெயர்களைத் தொடர்ந்து ஓதுதல். கடவுளர்களைப் புகழ்ந்து பாடுதல், மதச் சின்னங்களைச் சுமந்து செல்லுதல், கடவுளுடன் தொடர்புடைய புனிதத்தலங்களுக்கு ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்ளுதல் ஆகியவை உள்ளடங்கும்.
- ஆழ்வார்கள் (வைணவ பக்தி அடியார்கள்), நாயன்மார்கள் (சிவனை வழிபடும் சைவ அடியார்கள்), ஆதிசங்கரர் (அத்வைதம்), இராமானுஜர் (விசிஷ்டாத்வைதம்) ஆகியோர் தென்னிந்தியாவில் பக்தி இயக்கத்தைப் பரப்பிய சான்றோர் ஆவர்.
- இராமாநந்தர், வல்லபாச்சாரியார், சூர்தாஸ், மீராபாய், சைதன்யதேவா, துளசிதாசர் மற்றும் துக்காராம் ஆகியோர் வடஇந்தியாவில் பக்தி இயக்கம் பரவக் காரணமான சான்றோர்கள்.
- இந்த சான்றோர்கள் பக்தனுக்கும், கடவுளுக்கும் இடையிலான அன்பிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**2. சூபியிஸம் என்றால் என்ன? அது இந்தியாவில் எவ்விதம் தடம் பதித்தது?**

**சூபியிஸம் மற்றும் இந்தியாவில் அதன் தடம் பதிப்பு:**

**சூபியிஸம்:**

- சூபி எனும் சொல் '**சுப்**' என்பதிலிருந்து தோன்றியதாகும். அதன் பொருள் **கம்பளி** ஆகும். சூபிக்கள் சொர சொரப்பான முரட்டுக் கம்பளியாலான உடைகளை அணிந்ததால் சூபிக்கள் என அழைக்கப்பட்டனர்.
- சூபியிஸம் அடிப்படையில் இஸ்லாமியத்தைச் சேர்ந்ததாக இருந்தாலும் அது இந்து, பௌத்த சமயக் கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தது.

**இந்தியாவில் தடம் பதித்தல்:**

- பத்து, பதினொன்றாம் நூற்றாண்டுகளில் டெல்லி சுல்தானிய ஆட்சியின்போது சூபியிஸம் முக்கியத்துவம் பெற்றது.
- இந்தியக் கருத்தாக்கங்களான யோகப்பயிற்சி, இந்திய இசை, நடனம் ஆகியவற்றை கைக்கொண்டது.
- மொய்னுதீன் சிஸ்டி, சிஸ்டி அமைப்பை இந்தியாவில் பிரபலமாக்கினார். நிஜாமுதீன் அவுலியா டெல்லியின் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்த எண்ணற்ற நபர்களால் பின்பற்றப்பட்டார்.

**3. இந்திய சமூகத்தில் பக்தி இயக்கம் எவ்விதத் தாக்கத்தை ஏற்படுத்தியது?**

**இந்திய சமூகத்தில் பக்தி இயக்கத்தின் தாக்கம்:**

- இந்து சமயத்திற்குப் புத்துயிர் ஊட்டப்பட்டது.
- பக்தி இயக்கச் சான்றோர்களால் அமைதியும், இணக்கமும் வளர்ந்தன.
- சாமானிய மக்களின் மொழியைப் பயன்படுத்தியதால் பக்தி இயக்கம் சாமானிய மக்களின் ஆதரவைப் பெற்றது.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



- இந்திய மொழிகள் வளர்வதற்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுத்தது. இலக்கியச் செயல்பாடுகளுக்கு உந்து சக்தியாய் அமைந்தது.
- தமிழ் மொழி பக்தி இயக்கக் காலப் பகுதியில் உயிர்த்துடிப்புடன் விளங்கிய ஒரே பழமையான மொழி. பக்தி இயக்கக் கோட்பாடுகளால் உந்தப்பட்ட தமிழ் மொழி சமய இலக்கியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கியது.
- சாதி முறையும் சமூக ஏற்றதாழ்வுகளும் மறையத் தொடங்கின.

## VIII. செயல்பாடு (மாணவர்களுக்கானது)

**1. தமிழகத்தின் பக்தி இயக்கப் பெரியோர் வாழ்ந்த பகுதிகள் மற்றும் அவர்களோடு தொடர்புடைய பகுதிகளுக்கு நேரில் செல்க.**

## பகுதி II - கூடுதல் வினாக்கள்

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

**1. பகவத் கீதையில் ...... சிறந்தது எனக் கூறப்பட்டுள்ளது.**

அ) பக்திமார்க்கம் ஆ) ஞானமார்க்கம்
இ) கர்மா மார்க்கம் ஈ) நிர்வாணம்

**விடை: அ) பக்திமார்க்கம்**

**2. அத்வைதத்தைப் போதித்தவர் ......**

அ) ஆதி சங்கரர் ஆ) இராமானுஜர்
இ) இராமாநந்தர் ஈ) சைதன்யர்

**விடை: அ) ஆதி சங்கரர்**

**3. 17 ஆம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த கவிஞரான திருத்தொண்டர் ......**

அ) சூர்தாசர் ஆ) துளசிதாசர்
இ) துக்காராம் ஈ) ரவிதாஸ்

**விடை: இ) துக்காராம்**

**4. சிஸ்டி ......... ல் இயற்கை எய்தினார்.**

அ) கர்தார்பூர் ஆ) குர்தாஸ்பூர்
இ) லாகூர் ஈ) ஆஜ்மீர்

**விடை: ஈ) ஆஜ்மீர்**

**5. குருநானக் ..... என்ற தனது சீடரைத் தனக்குப் பின்னரான குருவாக நியமித்தார்.**

அ) ஆதிக்கிரந்தம் ஆ) லேனா
இ) குரு கோவிந் சிங் ஈ) குரு அர்ஜுன் சிங்

**விடை: ஆ) லேனா**

| | II. கோடிட்ட இடங்களை நிரப்புக | விடைகள் |
|---|---|---|
| 1. | கபீரின் பாடல்கள் ...... மொழியில் எழுதப்பட்டவை. | **போஜ்புரி** |
| 2. | 2019 குருநானக்கின் ...... வது பிறந்தநாளைச் சிறப்பிக்கிறது. | **550** |
| 3. | சூபியிஸம் ...... கடுமையான ஒழுக்க விதிகளை மறுத்தது. | **உலேமாக்களின்** |
| 4. | வங்காளத்தில் பக்தி இயக்கம் ...... உடன் தொடர்புடையது. | **சைதன்ய தேவா** |
| 5. | பெரியாழ்வார் ஆண்டாளை கோவில் ....... கண்டெடுத்தார். | **துளசித் தோட்டத்தில்** |

## III. பொருத்துக

| | I | | II | | விடைகள் |
|---|---|---|---|---|---|
| 1 | ஆண்டாள் | அ | விதோபா | **ஈ** | **வைணவ அடியார்** |
| 2 | அரங்கநாதர் | ஆ | சைவ அடியார் | **இ** | **திருவரங்கம்** |
| 3 | வடகலை வைணவம் | இ | திருவரங்கம் | **உ** | **காஞ்சிபுரம்** |
| 4 | கிருஷ்ணர் | ஈ | வைணவ அடியார் | **அ** | **விதோபா** |
| 5 | அப்பர் | உ | காஞ்சிபுரம் | **ஆ** | **சைவ அடியார்** |



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



## IV. சரியான இணையைத் / இணைகளைத் தேர்ந்தெடுக்கவும்

1. ஆதி சங்கரர் - சங்கராச்சாரியார்
இராமானுஜர் - அத்வைதம்
திவ்வியபிரபந்தம் - நாயன்மார்கள்
கபீர் - சீக்கியர்
கிர்பான் - குறுவாள்

**விடை: 1. ஆதி சங்கரர் - சங்கராச்சாரியார்**
**5. கிர்பான் - குறுவாள்**

2. **கூற்று :** கபீர் வாரணாசியை இருப்பிடமாகக் கொண்ட இராமாநந்தரின் செல்வாக்கிற்கு ஆட்பட்டார்.
**காரணம் :** அவர் கடவுள்களையும், பெண் கடவுள்களையும் நம்பினார்.
அ) காரணம், கூற்றின் சரியான விளக்கமல்ல. ஆ) காரணம், கூற்றை சரியாக விளக்குகிறது.
இ) கூற்று சரி, காரணம் தவறு. ஈ) கூற்று, காரணம் இரண்டும் தவறு.

**விடை: இ) கூற்று சரி, காரணம் தவறு.**

3. **பொருந்தாததைக் கண்டுபிடி.**
சிஸ்டி, பிர்தௌசி, சுரவார்டி, கால்சா **விடை: கால்சா**

## V. சரியா? தவறா?

1. சிஸ்டி அமைப்பை பின்பற்றியவர்களுள் கவிஞர் அமீர் குஸ்ருவும் ஒருவர். **விடை: சரி**
2. தர்மசாலைகள் குருத்வாராக்கள் ஆயின. **விடை: சரி**
3. உயிர் துடிப்புடன் விளங்கிய ஒரே பழமையான மொழி சமஸ்கிருதம் மட்டுமே. **விடை: தவறு**
4. மீராபாய் அவருடைய கீர்த்தனைகள் மூலம் பிரபலமானார். **விடை: தவறு**
5. ஆதிசங்கரர் பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி ஆகிய இடங்களில் மடங்களை நிறுவினார். **விடை: சரி**

## VI. குறுகிய விடையளி

1. **வைணவத்தின் இரு பிரிவுகள் குறித்து நீவிர் அறிந்ததென்ன?**

வைணவத்தின் இரு பிரிவுகள் வடகலை வைணவம் மற்றும் தென்கலை வைணவம்.

**வடகலை வைணவம்:**

காஞ்சிபுரத்தில் வடகலை வைணம் செழித்தோங்கியது. அது புகழ்பெற்ற சமஸ்கிருதக் கல்வி மையம். வடகலையின் முக்கியத்துவம் சமஸ்கிருத வேத நூல்கள்.

**தென்கலை வைணவம்:**

திருவரங்கத்தை தென்கலை வைணவம் மையமாகக் கொண்டிருந்தது. தென்கலையின் முக்கியத்துவம் தமிழ்மொழியில் எழுதப்பட்ட (12 ஆழ்வார்கள்) திவ்விய பிரபந்தம்.

2. **வல்லபாச்சாரியார் குறித்து ஒரு சிறுகுறிப்பு வரைக.**

**வல்லபாச்சாரியார்:**

வல்லபாச்சாரியார் ஒரு தெலுங்கு தத்துவஞானி. அவர் மதுராவுக்கு அருகே கோவர்த்தன் குன்றுகளில் கிருஷ்ண பகவானுக்கு ஒரு கோவிலை அமைத்தார்.

3. **கால்சாவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் கொண்டிருக்க வேண்டிய ஐந்து தனித்தன்மைகள் யாவை?**

**கால்சா உறுப்பினரின் ஐந்து தனித்தன்மைகள்:**

- கேஷ் (வெட்டப்படாத முடி)
- கன்கா (சிகைக்கோல்)
- கிர்பான் (குறுவாள்)
- கடா (இரும்புக் காப்பு)
- கச்சேரா (கீழ்ப்பகுதி உள்ளாடை)

4. **ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தொடங்கிய வழிபாட்டு முறைகளிலான புத்தெழுச்சி எவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது.**

**தமிழகத்தில் தொடங்கிய வழிபாட்டு முறைகள் (ஏழாம் நூற்றாண்டு):**

- ஆண், பெண் கடவுளர்களின் பெயர்களைத் தொடர்ந்து ஓதுதல்.
- கடவுளர்களைப் புகழ்ந்து பாடுதல்.
- மதச் சின்னங்களை அணிந்து கொள்தல் (அல்லது) அடையாளச் சின்னங்களைச் சுமந்து செல்தல்.
- கடவுளுடன் தொடர்புடைய புனிதத்தலங்களுக்கு ஆன்மீகப் பயணங்கள் மேற்கொள்தல்.



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB



**5. சமய இயக்கங்களில் பிற சமயங்கள் சார்ந்த கூறுகளைச் சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டப்பட்டதா?**

இல்லை. எவ்விதத் தயக்கமும் காட்டப்படவில்லை.

- இந்து, இஸ்லாம் இரு சமயங்களிலும் அறிவுநிலை கடந்த சமய இயக்கங்கள் செயல்பட்டன. தங்களுடைய போதனைகளில் வெவ்வேறு சமயங்கள் சார்ந்த கூறுகளையும் சேர்த்துக் கொள்வதில் தயக்கம் காட்டவில்லை.
- **எடுத்துக்காட்டு:** "இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே" என்பது ஹரிதாசர் கூற்று.

## VII. விரிவான விடையளி

**1. "ஆதி சங்கரரின் தத்துவமும் அவரின் பணிகளும்" - விவரி.**

- ஆதிசங்கரர் (சங்கராச்சாரியார்) அத்வைதம் எனும் தத்துவத்தைப் போதித்தார்.
- "ஞானத்தைப் பெறுவதன் வழியாக ஜீவாத்மா பரமாத்மாவுடன் (பிரம்மா) இணையும்" என்பதே அத்வைதத்தின் சாரமாகும்.
- சங்கரர் பத்ரிநாத், பூரி, துவாரகா, சிருங்கேரி ஆகிய இடங்களில் மடங்களை நிறுவினார். அவை கற்றுக் கொள்ளுதல் மற்றும் வழிபாட்டு மையங்களாகத் திகழ்ந்தன.
- பக்தி இயக்கத்தின் மீது கவனம் கொள்ளாத அவர் வேத மரபுகளை மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஆர்வம் கொண்டார்.
- பிரம்ம சூத்திரம் (வேதாந்தப் பள்ளியின் அடிப்படை நூல்) நூலுக்கு அவர் எழுதிய உரையே அவர் பணிகளில் சாலச் சிறந்தது. அவர் உபநிடதங்களுக்கும் உரை எழுதியுள்ளார்.

**2. "குருநானக்" வரலாற்றைச் சுருக்கமாக எழுது**

**குருநானக்:**

- குருநானக் 1469ல் லாகூருக்கு அருகே ஒரு கிராமத்தில் பிறந்தார்.
- குழந்தைப் பருவ முதலே ஏனைய சான்றோர்களிடம் சமயம் தொடர்பான கலந்துரையாடல்கள் செய்வதில் ஆர்வம் காட்டினார்.
- இயல்பான உலக வாழ்க்கையில் அவரை அவருடைய பெற்றோர்கள் ஈடுபடுத்துவதில் அக்கறை கொண்ட போதிலும், அவர் ஆன்மீகத்தில் மனச்சாய்வு கொண்டிருந்தார்.
- நானக் பல புனிதத் தலங்களுக்குச் சென்று வந்த பின் இறுதியில் லாகூருக்கு அருகிலுள்ள கர்தார்பூரில் குடியேறினார். 1539 அங்கே இயற்கை எய்தினார்.
- இந்திய அரசால் நானக் கோவிலையும் (குர்தாஸ்பூர்) குருத்வாரா தர்பார் சாகிப்பையும் (பாகிஸ்தானில் உள்ள கர்தார்பூர்) இணைக்கும் நடைபாதை ஒன்றை 2019ல் அவருடைய 550வது பிறந்த நாளைக் சிறப்பிப்பதற்காகக் கட்டியிருக்கிறது.

**3. பக்தி இயக்கத்திற்கு கபீரின் பங்களிப்பு - விளக்குக.**

**கபீர் மற்றும் பக்தி இயக்கம்:**

- கபீர் ஓர் இஸ்லாமியராக இருந்தபோதிலும், இராமாநந்தரின் (வாரணாசியை இருப்பிடமாகக் கொண்ட அடியார்) செல்வாக்கிற்கு ஆட்பட்டார்.
- சில இந்து சமயக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட அவர் இந்து இஸ்லாம் சமயங்களிடையே ஒத்திசைவை ஏற்படுத்த முயற்சி மேற்கொண்டார்.
- அவரின் கருத்துக்கள் இந்து சமூகத்தில் குறிப்பாக கீழ்நிலை சாதிகளைச் சார்ந்தோர்க்கு ஏற்புடையதாய் அமைந்தன. கபீர் சமயம், சாதி, செல்வம் அடிப்படையிலான பாகுபாடுகளை கண்டனம் செய்தார்.
- அவர் கடவுள் ஒருவரே, அவர் வடிவமற்றவர் என்று நம்பினார். பல்வேறு சமயப்பிரிவுகள் கடவுளுக்கு வெவ்வேறு பெயர்களையும் வடிவங்களையும் கொடுத்திருந்தன. கபீர் பொருளற்ற சடங்கு முறைகளையும் எதிர்த்தார்.
- அவருடைய பாடல்கள் போஜ்புரி மொழியோடு உருது கலந்து எழுதப்பட்டவை. (கிரந்தவளி மற்றும் பைஜக் அவருடைய கவிதைத் தொகுப்புகள்)



TNPSCJOB | www.tnpscjob.com

TNPSCJOB




## VIII. உயர்சிந்தனை வினா

1. **இஸ்லாத்தின் கடும் எதிர்ப்பையும் மீறி வேத இந்து மதத்தை பக்தி இயக்கம் பாதுகாத்தது என்பதை ஆராய்க.**

**வேத இந்து மதத்தை பக்தி இயக்கம் பாதுகாத்தல்:**

- இந்து. இஸ்லாம் ஆகிய இரு சமயங்களிலும் அறிவுநிலை கடந்த சமய இயக்கங்கள் செயல்பட்டன. தங்களுடைய போதனைகளில் வெவ்வேறு சமயங்கள் சார்ந்த கூறுகளையும் சேர்த்துக் கொள்வதில் அவர்கள் தயக்கம் காட்டவில்லை.
- ஹரிதாசரின் கூற்று "இந்துக்களும் இஸ்லாமியரும் கடவுளை வெவ்வேறு பெயர்களில் அழைத்தாலும் இருப்பது ஒரேயொரு கடவுள் மட்டுமே".
- பிற சமய கடுந்தாக்குதல்களிலிருந்து பாதுகாத்துக் கொள்ள புலவர்களாகவும் ஞானிகளாகவும் இருந்த ஆழ்வார்களும், நாயன்மார்களும் சாதியை அடிப்படையாகக் கொண்ட சமூகநிலைகளைச் சாடியதோடு, ஆண், பெண் சமத்துவத்தையும் முன்னிறுத்தினர்.
- ஆதி சங்கரர் பக்தி இயக்கத்தின் மீது கவனம் கொள்ளாது வேத மரபுகளை மீட்டெடுக்கும் முயற்சிகளில் ஆர்வம் கொண்டார்.
- சமூக, சமத்துவக் கருத்துகளைப் பரப்பிய இராமானுஜர் கோவில்களில் நுழைவதற்கான சாதியக் கட்டுபாடுகளை கண்டனம் செய்தார்.
- கபீர், குருநானக் (புதிய சமயப்பிரிவுகள்) மற்றும் வங்காளத்தில் சைதன்ய தேவா ஆகியோர் சிறப்பாய் செயல்பட்டனர்.
- இராமாநந்தர், வல்லபாச்சாரியார் (தெலுங்கு), சூர்தாஸ் (ஆக்ரா), மீராபாய் (மேவார்), துளசிதாசர், துக்காராம் ஆகியோரும் பக்தி இயக்கத்தைப் பரப்பியதன் மூலம் வேத இந்து மதத்தைப் பாதுகாத்தனர்.

## மனவரைபடம்




✦✦✦



TNPSCJOB | www.tnpscjob.com